Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 10 திங்கட்கிழமை (24-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:118

# அமெரிக்க சிப்பாய்கள் 35 பேரை ஈராக் படைகள் சிறைப்பிடித்தன!



ஈராக்கிடம் சிக்கிய அமெரிக்கப் பெண் சிப்பாய் சவ்னா (வயது 30). இவர் டெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்தவர்.



மற்றொரு போர்க் கைதியான கென்சாஸைச் சேர்ந்த பிறிவேட் மில்லர் என்ற சிப்பாய்.

## பதில் தாக்குதல் தீவிரம் இழப்புக்கள் அதிகரிப்பு

பக்தாத்,மார்ச்24

**பக்தாத் நோக்கி முன்னேறிவரும் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் ஈராக்கிடமிருந்து கடும் எதிர்ப்பைச் சந்திக்கத் தொடங்கியிருக்கின்றன. போரின் நான்காவது நாளான நேற்று பல டசின் கணக்கான தனது துருப்புகளை அமெரிக்கா சண்டையில் இழந்தது. அதேவேளை, சுமார் 35 அமெரிக்க வீரர்களை ஈராக் படைகள் சிறைப் பிடித்திருக்கின்றன.**

சிறைப்பிடிக்கப்பட்ட அமெரிக்க வீரர்களில் ஐவரின் படங்களையும் அவர்களது பேட்டிகளையும் ஈராக் தொலைக்காட்சி நேற்று ஒளிபரப்பியது. ஈராக்கின் நஸீரியா நகரில் நடந்த தீவிர சண்டையின்போது இவர்கள் சிறைப் பிடிக்கப்பட்டனர் என்று ஈராக் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

ஈராக் வசம் சிக்கியுள்ள ஐவருமே காயமடைந்த நிலையில் காணப்பட்டனர். இவர்களை விட உயிரிழந்த அமெரிக்கப் படையினர் நால்வரின் சடலங்களையும் ஈராக் தொலைக்காட்சி காட்டியது.

உயிருடன் சிக்கிய ஐவரும் தங்களது பெயர்கள் மற்றும் படைப் பிரிவுகள், சொந்த இடம் போன்ற விவரங்களை தொலைக்காட்சிப் பேட்டியில் தெரிவித்தனர். அவர்களில் ஒருவர் முப்பது வயதான சவ்னா என்கின்ற பெண் சிப்பாய் ஆவார்.

உத்தரவின் பேரிலேயே நாங்கள் ஈராக் மண்ணில் இறங்கியதாக அவர்கள் தெரிவித்தனர். எவரையும் கொல்கின்ற ஆசை தனக்கு இல்லை என்று பிறிவேட் மில்லர் என்ற அமெரிக்கச் சிப்பாய் கூறினார்.

இதேவேளை -

35 இற்கும் அதிகமான அமெரிக்கத் துருப்பினர் தங்களிடம் போர்க் கைதிகளாகச் சிக்கியுள்ளனர் என்றும் அவர்கள் தொலைக்காட்சியில் காண்பிக்கப்படுவர் என்றும் ஈராக் அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

ஈராக் போர் தொடங்கிய பின்னர் அமெரிக்கத் துருப்புகள் போர்க் கைதிகளாக ஈராக் வசம் சிக்கியிருப்பது

(14ஆம் பக்கம் பார்க்க)



மூன்றாவது தடவையாக கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வென்று சாதனை படைத்துள்ளது ஆஸ்ரேலியா. இந்தியாவை 125 ஓட்டங்களால் [illegible] அது வென்றது. கிண்ணத்துடன் ஆஸி. அணியினர்.

## ஈராக் போர் நிலவரம்

- அமெரிக்கா தலைமையிலான படைகள் கடும் பதிலடியை எதிர்கொள்கின்றன
- பிரிட்டிஷ் போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது!
- ஈராக்கில் ஆஸி. செய்தியாளர் பலி!
- சதாமின் புதல்வர் பலியானாரா?
- அமெரிக்கப் படைமுகாம் மீது கிரனேட் வீச்சு; ஒருவர் பலி!

(விரிவான செய்திகள் 3 ஆம் பக்கத்தில்)

## ஐந்து சந்திப் பகுதி மோதல்கள் தணிந்தன

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் கடந்த இரு தினங்களாக இரு சமூகங்களைச் சேர்ந்தவர்களிடையே இடம்பெற்றுவந்த மோதலுக்கு இணக்கத் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் செந்தில்நந்தனன் மற்றும் யாழ் தலைமைப் பொலீஸ் நிலைய அதிகாரி, அப்பிரதேச கிராம அலுவலர்கள் ஆகியோர் நேற்று ஒன்றாக மேற்கொண்ட முயற்சிகளை அடுத்து மோதல்களில் ஈடுபட்ட இருதரப்பினரும் இணங்கிப் போகச் சம்மதித்தனர். யாழ். பொலீஸ நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுகளை வாபஸ் பெறவும் அவர்கள் சம்மதித்தனர்.

இரு தினங்கள் நடந்த மோதல்களால் இருதரப்பினருக்கும் ஏற்பட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)




உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

பரிசில்களை வென்றோர் விவரம் நாளைய உதயனில்

## சீன மீனவர்கள் நால்வரது சடலங்கள் கரை ஒதுங்கின

யாழ்ப்பாணம்,மார்ச்24

வெளிநாட்டவர்களுடையவை எனச் சந்தேகிக்கப்படும் நால்வரின் சடலங்கள் நேற்று மாலை பருத்தித் துறை கற்கோவளம் கடற்கரையில் ஒதுங்கின.

இந்தச் சடலங்கள் முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்த வியாழனன்று தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சீன நாட்டு மீன்பிடி றோலரில் இருந்த சீன மீனவர்களுடையவை எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

ஊதிப்பருத்த நிலையில் காணப்பட்ட சடலங்கள் படையினரால் மீட்கப்பட்டு பொலீஸாரிடம் கையளிக்கப்பட்டன.

பருத்தித்துறை பொலீஸார் அவற்றை நேற்றிரவு யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

இன்று விசாரணையின் பின்னர் சடலங்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-12-5-173)

### கல்வி அலுவலகங்கள் முன்பாக

## தொண்டர் ஆசிரியர்கள் இன்று முதல் மறியல்

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் குடாநாட்டிலுள்ள ஐந்து கல்வி வலயங்களுக்கு முன்பாக இன்று முதல் தொடர்ச்சியாக மறியல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

தமக்கு நியமனம் வழங்காததைக் கண்டித்து யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய கல்வி வலயங்களுக்கு முன்பாக இந்த மறியல் போராட்டம் நடத்தப்படவிருப்பதாக தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

காலை 7மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த மறியல் போராட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

இதேவேளை -

தொண்டராசிரியர்கள் இன்று முதல ஆரம்பிக்கவுள்ள தொடர்ச்சியான மறியல் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வலயப் பிரதிநிதிகள் போராட்டத்தில் கலந்துகொண்டு ஆதரவை வழங்குவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு முன்பாக தொண்டர் ஆசிரியர்கள் சுழற்சி முறையில் மேற்கொண்டு வரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் உட்பட 25 உறுப்பினர்கள் இன்று பங்கேற்பர். (ஐ-4-6)

### தமிழ்க் கூட்டமைப்புடன் சேராமல்

## உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டணி தனித்துப் போட்டியிடுவதே நல்லது!

### ரவிராஜ் எம்.பியின் விருப்பம் இது

யாழ்ப்பாணம்,மார்ச்24

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் கூட்டமைப்புடன் இணையாது தனித்துப் போட்டியிடுவதே சிறந்தது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினருமான என்.ரவிராஜ்

கூட்டணியின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.பொது நூலகத்தில் 99 சதவீதமான வேலைகள் முடிந்துவிட்டன என்பது உண்மைதான். நூலகத்துக்கென ஒதுக்கப்பட்ட 22 கோடி ரூபாவுக்கான வேலைகள் பூர்த்தியடைந்து விட்டன.

மேலதிகமாக ஒதுக்கப்பட்ட 21 மில்லியன் ரூபாவுக்கான வேலைகளே மீதமாக இருக்கின்றன. அதாவது நூலகத்துக்கான 'லிப்ற்' வசதிகள் மற்றும் குளிரூட்டி பொருத்துதல், சிற்றுண்டிச்சாலை உருவாக்கல் போன்ற

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

ASIAN
COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel
IBM
hp
Mercury
PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி விதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

SHARP Action of the day



பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ்
BROWNS ELECTORINICS
Browns

# எங்கே போயிற்று இந்திய அணி?

ஒரு மாதக் கொண்டாட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. விறுவிறுப்பே இல்லாத ஆட்டம். கடந்த சில இறுதியாட்டங்கள் போலவே இதுவும் ஒரு தரப்பு ஆட்டமாக முடிந்துவிட்டது. ஆஸ்திரேலியத் தரப்பு ஆட்டம். இந்தியர்கள் போராடும் வலிமையற்றுச் சுருண்டு கொண்டார்கள். 100 கோடி ரசிகர்களை ஏமாற்றினார்கள்; கண்ணீரில் கரைய விட்டார்கள். தொடர்ந்தும் தாங்களே ஜாம்பவான்கள் என்பதை ஆஸ்திரேலியர்கள் நிருபிக்க இடம்கொடுத்தார்கள். ஆஸ்திரேலியாவின் உயர்ஜாதிக் குதிரை எப்போதும் தான் மேலானதே என்று பிடரிமயிர் சிலுப்பிக் கொண்டது.

அவர்களுக்கு அதற்கு உரிமை இருக்கிறது. தொடர்ச்சியாக இரு தடவைகள் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார்கள். மூன்று தடவைகள் கிண்ணத்தை வென்ற ஒரே அணி என்ற சாதனையை அவர்கள் படைத்துள்ளனர். இந்தத் தொடரில் எந்த ஓர் ஆட்டத்திலும் தோற்கவில்லை அவர்கள்; எல்லாவற்றையும் வென்றுகிண்ணத்தை தட்டிச் சென்றுவிட்டார்கள். தொடர்ச்சியான 8 வருடங்களுக்கு அவர்கள்தான் ராஜாக்கள்.



பிடரிமயிர் சிலிர்த்து முன்கால்களைத் தூக்கி ஆஸ்திரேலியக் குதிரை உதைத்த உதையில் பெங்காலிப் புலி தலைமையிலான இந்தியப் புலிகள் காணாமற்போயின; ஓடி ஒளிந்து கொண்டன. வெற்றியின் திளவெடுத்து மைதானம் முழுவதும் சுற்றி ஓடிற்று ஆஸிக் குதிரை. பார்த்த பல லட்சக் கணக்கான இந்தியர்கள் பொறுக்க முடியாமல் பொருமினார்கள்.

இந்தியாவின் வேகப் பந்துவீச்சாளர்களும் டெண்டுல்கரும் ஆஸ்திரேலியாவுக்கு சவால் விடுவார்கள் என்று கூறப்பட்ட ஆரூடங்கள் எல்லாம் பொய்த்துப் போயின. ஏனைய அணிகளிடம் காட்டிய வித்தை எதனையும் இந்திய வேகப் பந்துவீச்சாளர்களால் ஆஸி வீரர்களிடம் காட்ட முடியவில்லை. எல்லோர் பந்துகளை

(13 ஆம் பக்கம் பாக்க)

# பொன்டிங் அபாரம்!

8ஆவது கிரிக்கெட் உலகக் கிண்ண இறுதியாட்டம் நேற்று ஆஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கு இடையில் இடம்பெற்றது. 125 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வென்றது. அணித் தலைவர் ரிக்கி பொன்டிங், இந்தியப் பந்துவீச்சாளர்களின் பந்துகளை அடித்து நொறுக்கி இந்தியாவின் கனவுகளைக் கலைத்தார்.

நாணயச் சுழற்சியில் வென்ற இநதிய அணித் தல்லவர் கங்குலி முதலில் பந்துவீசப்போவதாக அறிவித்தார். அப்போது அவருக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கவில்லை இப்படி மிகப் பெரிய எண்ணிக்கை அடிக்கப்படும் என்று. பந்து வீச்சை ஆரம்பித்தவர் ஷஹீர் கான். கடந்த ஆட்டங்கள் பலவற்றில் அற்புதமாகப் பந்துவீசியவர். வெற்றிகளுக்குக் காரணமாக இருந்தவர். ஆனால், அவரது செப்படி வித்தையெல்லாம் ஆஸி. துடுப்பாளர்களிடம் எடுபடவில்லல. அடித்துக் கொளுத்தினார்கள் அவர்கள். இந்தியப் பந்துவீச்சாளர்களுக்கு அங்கே மரியாதை என்பது மருந்துக்கும் கிடைக்கவில்லை. நொறுக்கப்பட்ட பந்துகள் கதறிக் கதறி எல்லையைத் தொட்டன.



முதலாவது ஓவரிலேயே 15 ஓட்டங்கள். அதில் 8 உதிரிகள். அணியின் அரைச்சதம் 7ஆவது ஓவரில் எட்டப்பட்டது. ஸ்ரீநாத்தின் ஓவரில் 'சிக்ஸ்' அடித்தார் கில்கிறிஸ்ட். ஒரு புறத்தில் ஹைடன் நிதானமாக நின்றாட, அடித்துக் கொளுத்தினார் கில்கிறிஸ்ட். 10 ஓவர்களில் எண்ணிக்கை 80. வேகப் பந்துவீச்சாளர்கள் துவைக்கப்படுவதைப் பார்த்த கங்குலி 10ஆவது ஓவரிலேயே ஹர்பஜன்சிங்கை தாக்குதலுக்கு இறக்கினார். ஆனால், ஓட்டங்கள் குவிந்த வண்ணமே இருந்தன. 40 பந்துகளில் தன் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார் கில்கிறிஸ்ட். 13.4 ஓவர்களில் அணி எண்ணிக்கை 100இற்கு எகிறியது.

8 பௌண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 48 பந்துகளில் 57 ஓட்டங்களை விளாசிய கில்கிறிஸ்டை பெவிலியன் திருப்பினார் ஹர்பஜன். கில்கிறிஸ்ட் தூக்கி அடிக்க உயர்ந்து எழுந்த பந்து ஷேவாக் கைகளில் சரணடைந்தது. 105 ஓட்டங்களுக்கு முதல் விக்கெட் இழப்பு. வந்தவர் அணித் தலைவர் பொன்டிங். அடுத்த சிறிது நேரத்தில் ஹைடனையும் வெளியேற்றினார் ஹர்பஜன். தன்னைக் குறுக்கே கடந்து சென்ற பந்தை தடுக்க முயன்று பின்னால் திராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் ஹைடன். 125 ஓட்டங்களுக்கு இரண்டாவது விக்கெட் இழப்பு.



உலகக் கிண்ண தோல்வியை அடுத்து கோபமடைந்த இந்திய ரசிகர்கள் நேற்றிரவு கொல்கத்தாவில் கங்குலியின் படத்தை தீயிட்டுக் கொளுத்துவதைப் படத்தில் காணலாம்.

அன்று முழுவதும் இந்தியர்களால் வீழ்த்த முடிந்தது அந்த இரு விக்கெட்டுக்களைத்தான். ஹைடனுக்குப் பதிலாக வந்த டேமியன் மார்ட்டினும் பொன்டிங்கும் சேர்ந்து இந்தியப் பந்துவீச்சுக்களைத் துவம்சம் செய்தனர். ஓட்டச் சராசரி 6 ஓட்டங்களைவிட்டு இறங்க மறுத்தது. மேலும் மேலும் உயர ஆரம்பித்தது. கங்குலி செய்வதறியாது திகைத்து நின்றார். பந்துகள் எல்லை தாண்டி மேலாலும் கீழாலும் சீறின. அற்புதமான அதிரடி ஆட்டம் ஒன்று பார்க்கக் கிடைத்தது ரசிகர்களுக்கு. 24 ஓவர்களில் அணியின் எண்ணிக்கை 150இற்குத் தாவியது. 33ஆவது ஓவரில் 200 ஓட்டங்கள். 46 பந்துகளில் அரைச்சதம் அடித்தார் மார்ட்டின்.

(13ஆம் பக்கம் பார்க்க)

# தொடரின் நாயகன் சச்சின் டெண்டுல்கர்!

கிரிக்கெட் உலகக் கிண்ண தொடரின் சிறப்பாட்டக்காரர் விருது இந்தியாவின் சச்சின் டெண்டுல்கருக்கு வழங்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணத் தொடரின் இறுதி ஆட்டம் நடைபெறுவதற்கு முன்பாக சனிக்கிழமையே, டெண்டுல்கரே இந்த விருதுக்குரியவர் என ஐ.சி.சி. உத்தியோகபூர்வமாக அறிவித்தது. நேற்று அவருக்கு விருது வழங்கப்பட்டது.

உலகக் கிண்ணத் தொடரின் இயக்குநர் அலிபக்கர் இது குறித்துக் கூறுகையில் -

"இத்தொடர் மிகச் சிறந்த உலகக் கிண்ணத் தொடராக இருக்க வேண்டுமென விரும்பினோம். சச்சினின் துடுப்பாட்டம் பல லட்சக்கணக்கானோரை கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு ஈர்ப்பதற்கு உதவியது. அவர்

(13 ஆம் பக்கம் பாக்க)

# மோசமான பந்துவீச்சே தோல்விக்குக் காரணம்



பந்துவீச்சாளர்களின் மோசமான செயற்பாடே உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் இந்தியா தோற்றுப் போவதற்குக் காரணம் என்று இந்திய அணித தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்தார்.

நாணயச் சுழற்சியில் வென்ற கங்குலி முதலில் ஆஸ்திரேலிய அணியை துடுப்பெடுத்தாட அழைத்தமை பற்றி இப்போது விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஆனால், தான் எடுத்த முடிவு சரியானது என்று வாதிட்டார் கங்குலி. உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் தோற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

"எனது முடிவு தவறானதல்ல. ஆடுகளம் காலையில் பந்துவீச்சுக்கே சாதகமாக இருந்தது. நாம் பந்துகளை சரியான (13 ஆம் பக்கம் பாக்க)

SHARP
ஜப்பானிய ஷார்ப்
நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன் கூடிய
விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயனியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1எ, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

என்றென்றும் தரம்
அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில்
என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

### இராணுவ நடவடிக்கை ஆரம்பித்தபின் முதற்றடவையாக

# அமெரிக்கா தலைமையிலான படைகள் கடும் பதிலடியை எதிர்கொள்கின்றன!

லண்டன்,மார்ச்24

அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் ஈராக்கில் கடும் எதிர்த்தாக்குதல்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளன. கடந்த 20 ஆம் திகதி ஆரம்பித்த இராணுவ நடவடிக்கையில் தற்போதுதான் ஈராக்கிய இராணுவத்தின் பதிலடி கடுமையாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஈராக்கின் துறைமுக நகரான உம் குவாசிர் மற்றும் புனித நகரான நஜவ் ஆகிய இடங்களிலேயே அமெரிக்கப் படையினர் தீவிர தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுளளது. ஈராக்கின் எல்லையோரம் உள்ள பாலைவனம் வழியே நுழைந்த அமெரிக்கப் படையினர் வழியில் தென்பட்ட சிறு குடியிருப்புக்களைத் தாண்டி வேகமாக பக்தாத்தை நோக்கி முன்னேறி வந்தனர். தாம் எதிர்பார்த்த தற்கும் முன்னரே பக்தாத்தை அடைந்துவிட முடியுமென அமெரிக்க இராணுவப் பேச்சாளர் நம்பிக்கையும் வெளியிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே ஈராக்கிய இராணுவத்தின் விசேட பிரிவான 'குடியரசுப் பாதுகாவர்கள்' அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படையினரின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளனர்.

ஈராக்கின் ஒரே ஆழ்கடல் துறைமுகம் உள்ள உம் குவாசிர் நகருக்குள் நேற்றுமுன்தினம் அமெரிக்கப் படைகள் நுழைந்தன. ஆயினும், அங்கிருந்த மக்களில் பெரும்பாலானவர்கள் வெளியேறிய நிலையில் கட்டடங்களுக்குள் 'குடியரசு பாதுகாவலர்' படையினர் மறைந்திருந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால், இத்துறைமுகத்துக்குள் நுழைந்துவிட்டதாக அமெரிக்கப் படையினர் அறிவித்து 36 மணித்தியாலங்கள் கடந்துவிட்ட நேற்றைய தினம் வரையில் உம் குவாசிர் நகரை பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவோ அல்லது தமது இராணுவ நடவடிக்கைக்குத் துறைமுகத்தைப் பயன்படுத்தவோ அமெரிக்கப்படையினரால் முடியவில்லை.

உம் குவாசிரிலிருந்து பி.பி.ஸி. செய்தியாளர் அனுப்பிய படங்களில் அமெரிக்கப் படையினரின் மூன்று டாங்கிகள் மண் குன்றுகளையும் சிறு கட்டடங்களையும் நோக்கி தாக்குதல் நடத்துவதைக் காணமுடிந்தது.

இதேவேளை, நசிரியா நகரை நோக்கிச் சென்ற அமெரிக்க 'மரைன்' படையினரும் ஈராக்கிய இராணுவத்தினரின் கடும் தாக்குதலை எதிர்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது. புனித நகரான நஜாவ் அருகே மோதல்கள் நடந்து வருகின்றன.


'தமது தலைவர் சதாம் ஹுசைனுக்கு விசுவாசமான கணிசமான எண்ணிக்கையில் உள்ள ஒழுங்கற்றவர்கள் (ஈராக்கியர்கள்) நசிரியா நகருக்கு வடக்குப் புறத்திலிருந்து செல்லும பாதையை பாதுகாக்க முனைந்துள்ள கூட்டணிப் படையினர் மீது கடும் தாக்குதலை நடத்தி வருகிறார்கள்' என்று அமெரிக்க 'மரைன்' படைப் பிரிவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி ஈராக் மீதான இராணுவ நடவடிக்கையை அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் ஆரம்பித்திருந்தன. முதல் நாளில் ஏவுகணைகள் மற்றும் விமானங்களைப் பயன்படுத்தி பக்தாத் நகரில் உள்ள அரசியல் தலைவர்களின் இருப்பிடங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இரண்டாம் நாளில் அமெரிக்கப்படையினர் தரை வழியாக பக்தாத் நோக்கி முன்னேறினர். பாலைவனம் வழியாக அவர்கள் வேகமாக முன்னேறினர். அவ்வேளையில், ஈராக்கியப் படையினர் பதில் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை. இதனால், ஈராக் எத்தனை நாள்கள் தாக்குப்பிடிக்கும் என்று சந்தேகங்கள் எழுந்தன.

வான் மற்றும் தரைத் தாக்குதல் திறனில் பலமாக உள்ள அமெரிக்கக் கூட்டணிப் படையை வெட்ட வெளியான பாலைவனப் பகுதியில் சந்திப்பது புத்திசாலித்தனமற்ற நடவடிக்கை என்றும் -

இதனாலேயே ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் அமெரிக்கப் படையினரை பாலைவனத்தைத் தாண்ட விட்டு வழியில் உள்ள நகரங்களில் பதில் தாக்குதல் தொடுக்க திட்டமிட்டிருக்கக்கூடும் என்றும் -

ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஒ)



பாலைவனம் ஊடாக பக்தாத் நோக்கிச் செல்லும் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படையினர்.



அமெரிக்க விமானத் தாக்குதலில் காயமடைந்து பக்தாத் மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவரும் ஈராக்கிய பெண்மணி.

## ஈராக்கில் தற்கொலைத் தாக்கு; ஆஸ்திரேலிய செய்தியாளர் பலி!

லண்டன்,மார்ச்24

வடக்கு ஈராக்கில் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்பில் ஆஸ்திரேலிய செய்தியாளர் ஒருவர் கொல்லப்பட்டார்.

தற்கொலைத் தாக்குதல் என்று நம்பப்படும் இச்சம்பவத்தில் போல் மோரன் (வயது 39) என்பவரே உயிரிழந்தவராவார்.



தாக்குதலின் பின் சோதனை

குர்மல் என்ற வடபகுதிக் கிராமததில் படப்பிடிப்புப் பணியை மோரன் மேற்கொண்டிருந்ததாகவும் மோரன் அருகே வந்து அவ்வேளையில் நின்ற கார் ஒன்று வெடித்துச் சிதறியதில் அவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மோரனுடன் செய்தி சேகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த எரிக் கம்பெல் என்பவர் இச்சம்பவத்தில் படுகாயமடைந்தார்.

இக்குண்டுவெடிப்பு இடம்பெற்ற பகுதி அன்சார் அல் இஸ்லாம் என்ற அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த அமைப்பினர் பின்லேடனின் அல்கெய்டா அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்று அமெரிக்கா கூறி வந்தது. அத்துடன் தற்போதைய இராணுவ நடவடிக்கையில் அன்சார் அல் இஸ்லாமின் நிலைகள் மீது ஏவுகணைத் தாக்குதலையும் நடத்தியது.

இதேவேளை, அமெரிக்கத் தாக்குதலைப் பயன்படுத்தி இப்பகுதியின் கட்டுப்பாட்டை தமதாக்கிக்கொள்ள, குர்தீஸ் இனத்தவரின் உரிமைகளுக்காகப் போராடிவரும் குர்திஷ்தான் தேசப்பற்று ஒன்றியம் முயற்சித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## சதாமின் புதல்வர் பலியானாரா?

லண்டன்,மார்ச்24

ஈராக் அதிபர் சதாமின் மூத்த புதல்வர் உதய், போரில் கொல்லப்பட்டதாக நேற்று செய்திகள் பரவின.

உதய் கொல்லப்பட்டதை பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரிடம் அறிவித்தனர் என்று அச்செய்திகள்கூறின. ஆயினும் இச்செய்திகள் உறுதிப்படுத்தப்படவில்லை.

இது ஒருபுறமிருக்க, சனிக்கிழமையன்று பஸ்ரா நகரம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 110 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் ரஷ்யர். இரண்டு வயதுப் பிள்ளையுடனான ஒரு குடும்பமும் கொல்லப்பட்டது. இத்தாக்குதலில் 207 பேர் காயமடைந்தனர்.

- இவ்வாறு பக்தாத் செய்தி தெரிவித்தது.

அமெரிக்கக் கூட்டணிப் படையினருடன் நடந்த சண்டையில் அதிபர் சதாம் ஹுசைனின் பாத்கட்சித் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டார்.கொல்லப்பட்ட அந்த ஆளும் கட்சித்தலைவரின் பெயர் நயேப்சிதாக் என்று தெரியவந்துள்ளது.நயாப் பகுதியில் நடந்த தாக்குதலில் அவர் கொல்லப்பட்டதாக ஈராக் தொலைக்காட்சி அறிவித்தது.

## பிரிட்டிஷ் போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது!

### பெண் விமானி ஈராக்படை வசம்

பக்தாத் மீது தாக்குதல் நடத்திய பிரிட்டிஷ் விமானத்தை ஈராக் படைகள் சுட்டுவீழ்த்தின. இதை பிரிட்டிஷ் இராணுவமும் உறுதி செய்துள்ளது.

அந்த விமானத்தில் இருந்த பெண் விமானி, உதவி விமானி ஆகிய இருவரும் பரசூட் மூலம் பத்திரமாக தரையில் குதித்தனர். அவர்களை ஈராக் படைகள் சுற்றிவளைத்து கைதுசெய்துள்ளன. அபு கரியேப் என்ற இடத்தில் இந்த விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதாக ஈராக் வெளியுறவுத் துறை அமைச்சர் நாஜி சப்ரி தெரிவித்தார்.

எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடக்கும அரபு நாடுகளின் கூட்டத்தில பங்கேற்க அவர் வந்தார். கடும் போருக்கு இடையிலும் அவர் திடீரென இக்கூட்டத்தில் பங்கேற்க வந்தமை, அனைத்து அரபு நாடுகளையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

ஈராக் மீது குண்டுவீசச் சென்ற விமானம் திரும்பி வரவில்லை என லண்டனில் இராணுவச் செய்தித் தொடர்பாளர், செய்தியாளர்களிடம் கூறினார். வழ்த்தப்பட்டது எந்தவகையான விமானம் என்பதையோ அதிலிருந்த குண்டுகள் குறித்தோ எந்த விவரத்தையும் பிரிட்டன் தெரிவிக்கவில்லை. (ஒ)

### குவைத்தில் உள்ள

## அமெரிக்கப்படை முகாம் மீது கிரனேட் வீச்சு; ஒருவர் பலி!

குவைத் சிற்றி,மார்ச்24

குவைத்திலுள்ள அமெரிக்கத் தளத்தில் நடத்த கிரனேட் தாக்குதலில் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்; மேலும் 12 பேர் காயமடைந்தனர். இச்சம்பவம் தொடர்பாக அந்த முகாமைச் சேர்ந்த அமெரிக்கச் சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

வளைகுடா யுத்தத்தையடுத்து 1991 ஆம் ஆண்டு முதல் குவைத்தில் அமெரிக்கப் படையினர் நிலைகொண்டுள்ளனர். ஈராக் மீது நடத்தப்படும் தாக்குதலை முன்னிட்டு ஒருவாரம் முன்னர் 'பென்சில்வேனியா' என்ற முகாம் புதிதாக அமைக்கப்பட்டது. இந்த முகாமில் அமெரிக்க விமானப் படையின் 101ஆவது பிரிவு நிலை கொண்டிருந்தது.

இந்த முகாமில் நேற்று சிப்பாய் ஒருவர் இரு கிரனேட்டுகளை தனது சகாக்கள் மீதே எறிந்து தாக்குதல் நடத்தியுள்ளார். இதில் படுகாயமடைந்த 11 பேர் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். காயங்களுக்கு உள்ளான இருவருக்கு முகாமிலேயே சிகிச்சையளிக்கப்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் மக்ஸ் புளுமென்பல்ட் கூறுகையில், வீரர்களிடையேயான மனக்கசப்பே இச்சம்பவத்துக்குக் காரணம் - என்றார். (ஒ)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



**செல்வி ஜிந்துஜா மதுரநாயகம்**

ஆகில இலங்கை சர்வதேச மகளிர் தினக் கட்டுரைப் போட்டியில் 2ஆம் இடத்தைப்பெற்று, பண்டாரநாயகா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மகளிர் விவகார அமைச்சரிடமிருந்து பரிசில்கள், சான்றிதழ்களைப் பெற்ற, கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவி செல்வி ஜிந்துஜா மதுரநாயகத்தைப் பாராட்டி, வாழ்த்தி அவர் மேலும் சாதனைகளை நிலைநாட்ட இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

S.V.தங்கராசா. அம்மப்பா, அம்மம்மா, அன்ரி,
முருகன் இல்லம். சகோதர சகோதரிகள், மாமன்மார்,
தும்பளை கிழக்கு. பருத்தித்துறை. (15895) மச்சான்மார், மதணிமார்.

## தொழில் வாய்ப்பை உருவாக்கித்தர கோரிக்கை

தென்மராட்சி,மார்ச்24

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் தொழில்வளங்களும் பயன்தரு மரங்களும் யுத்தத்தின் போது அழிக்கப்பட்டதால் இப்பகுதியைச் சேர்ந்த தொழிற்பயிற்சி பெற்ற இருநூறுக்கும் மேற்பட்ட பெண்கள் தொழில் வருமானமின்றி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, இவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த தொழிற்பேட்டைகளை அமைக்குமாறும் -

சுயதொழில்மூலம் வருமானம் பெறக் கூடியவகையில் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி உதவி வழங்குமாறும் -

சாவகச்சேரி நகர மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினர் தென்மராட்சி பிரதேச செயலரை மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

(ஓ-117)

## ஆனைக்கோட்டை மண்ணுக்கு கிராக்கி!

நவாலி,மார்ச்24

குடாநாட்டில் ஆனைக்கோட்டை மண்ணுக்கு தற்போது கிராக்கி ஏற்பட்டுள்ளது. கட்டட வேலை செய்வோர் கச்சாய், நாகர்கோவில், மருதங்கேணி பகுதிகளில் மண் ஏற்றி வந்தபோதிலும், அப்பகுதிகளில் மணல் அகழக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆனைக்கோட்டைப் பகுதியிலிருந்து மண் ஏற்றுவதில் பலரும் ஈடுபட்டுள்ளனர்.

(ஓ-100)

## ஆணைக்குழு உறுப்பினரின் பதவிக்காலம்முடிவு

கொழும்பு,மார்ச்24

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தற்போதைய உறுப்பினர்களான கொட்பிறே குணதிலக(தலைவர்) மனோரி முத்தெட்டுகம, என்.செல்வகுமாரன் மற்றும் சரத் கூரே ஆகியோரின் பதவிக் காலம் நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களாக கலாநிதி ராதிகா குமாரஸ்வாமி, கலாநிதி தீபிகா உடகம, கலாநிதி சேனுத்தீன், என்.செல்வகுமாரன் மற்றும் முன்னாள் இறைவரித் திணைக்கள ஆணையாளரான சேனநாயக்கா ஆகியோரின் பெயர்கள் ஜனாதிபதிக்குச் சிபார்சு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

எமது பாடசாலை ஆசிரியை **திருமதி ஞானாமிர்தம் சைவஇறைமணி**
அவர்களின் அன்புத் தந்தை

**பண்டிதர் க.சீனித்தம்பி** *(ஆசிரியர்)*

அவர்கள் இறைபதம் அடைந்த 31ஆம் நாள் இன்று.
அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம
யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை,
(15877) வல்வெட்டித்துறை.

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் இரண்டாம் வருட ஆரம்பநெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவி **திருமதி தாரணி சுரேஸ்**
அவர்களின் தந்தையார்

**க.துரைசிங்கம்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யா/கோப்பாய் ஆசிரிய கலாசாலை
(C/37047) சமூகத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் நிதி உதவியாளராகக் கடமையாற்றும்
திருமதி எஸ்.யோகராசா அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் சபாபதிப்பிள்ளை தருமபாலு**

அவர்கள் 22.02.2003 காலமானதையிட்டு நாம் மிகவும் வருந்துகின்றோம். கவலையுறும் அவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன், அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், அவர்களின் துயரிலும் பங்கு கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்.
பிரதேச செயலகம்
(15832) நல்லூர்.

## கௌரவிப்பு

நல்லூர் சட்டநாதர் ஆலய பங்குனி உத்தர உற்சவத்தை சிறப்பாக நடத்திய பிரதமகுரு தாணு. வாசுதேவக்குரு உதவிகுரு வா. ஜெயஹஸ்த்தாங்க சர்மா - ச.சுகிதர சர்மா ஆகியோருக்கு ஆலய பரிபாலன சபை பொன்னாடை போர்த்து கௌரவித்து சபையினரும் பொதுமக்களும் குரு ஆசிபெற்று மகிழ்ந்தனர். அத்தோடு, ஆலயத்தில் கடந்த 20 ஆண்டுகள் சேவைபுரிந்த த.அருள்ராஜா அவர்களுக்கும் பரிபாலனசபையின் சார்பாகவும் பொதுமக்கள் சார்பாகவும் ஆலய பிரதமகுரு பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

*குறிப்பு:* ஆலயத்தில் திருமணம் செய்ய விரும்புவோர் ஆலய சபையினரிடம் தொடர்புகொண்டு ரூபா 5,000 கட்டி ரசீதைப் பெற்றுக்கொள்ளவும்.

★ போசன வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

இங்ஙனம்
நல்லூர் சட்டநாதர் சிவன்கோயில். (15886) பரிபாலனசபை.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| தாய் | மகள் | |
| 28 - 05 - 1957 | 27 - 07 - 1999 | 27 - 03 - 2000 |




**திருமதி இராஜலட்சுமிபிள்ளை பொன்னையா**
**செல்வி கீர்த்தனா பொன்னையா**

இன்று (24.03.2003) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலிப் பிரார்த்தனை யிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

*வெற்றிலைக்கேணி,*
*முள்ளியான்.* (15896) கணவர், பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 12 - 10 - 1928 உதிர்வு 22 - 02 - 2003



**அமரர் இராசசிங்கம் செகராசசேகரம்**

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (24.03.2003) திங்கட்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய உணவிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இராஜவீதி, சிறுப்பிட்டி மேற்கு,*
*நீர்வேலி.* (சி-37074) - குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் முதலாம் வருட நினைவு

மண்ணில் 14 - 10 - 1959 விண்ணில் 25 - 03 - 2002



**திருமதி**
**அலெக்ஸ் சாந்திரியா குருநாதன்**

அம்மா,

உங்கள் அன்பு முகம் காணாது
ஏங்குகிறோம் நித்தமும் நாம்
அரவணைக்கும் உங்கள் கரம்
தேடுகிறோம் பாலகர் நாம்
இறை அன்பில் வாழ்ந்த உங்கள்
அன்புள்ளம் எப்போதும்
ஆண்டவன் மலரடியில் நிதமும்
வாழும் என ஆறுதல் அடைகின்றோம்.

இவருக்காக இறைபுகழ்பாடி, நன்றி கூறி நாளை (25.03.2003) செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

(15846)

30/2. நீக்லஸ் லேன் தினமும் உன்நினைவோடு:
கச்சேரி நல்லூர் வீதி. யாழ்ப்பாணம். அன்புக் கணவர், பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



*'அமிர்த இல்லம்'*
*கரணவாய் வடக்கு,*
*வல்வெட்டித்துறை.*

**பண்டிதர்**

**க.சீனித்தம்பி**

*(ஆசிரியர் – சமரவூரினியான்)*

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1920-08-02 | 2003-02.22 |

*எமது நல்வாழ்விற்கு ஒளியேற்றி வைத்த அன்புத் தெய்வத்தை 31ஆம் நாளில் நினைவு கூர்வதுடன் அவரது ஆத்ம சாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று 2003.03.24 காலை 7.00 மணியளவில் எமது இல்லத்தில் இடம் பெறும் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளிலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

(15893)

# உதயன்

## உயர் பாதுகாப்பு வலயமும் அடிப்படை மனித உரிமை மீறலே!

ஐ.நா. சாசனங்கள், ஐ.நா. நியமங்கள் போன்றவற்றால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில பொதுவான மனித உரிமைகள் அடங்கிய ஒரு பிரகடனத்தை வெளியிடுவது என்று அரசும் புலிகளும் இணங்கியிருக்கின்றனர்.

ஜப்பானில் நடைபெற்ற ஆறாவது சுற்று சமாதானப் பேச்சுக்களில் புதுவழி ஏதும் திறக்கப்படவில்லை (No break - through) என்று பலரும் அங்கலாய்க்கின்றனர். ஒருவகையில் அது உண்மை என்றாலும் மனித உரிமைகள் சாசனம் ஒன்றை வெளியிட இரு தரப்பும் இணங்கியதும், அதற்கான அடிப்படை வடிவத்தை உருவாக்குவதில் ஓர் இணக்க நிலை ஏற் பட்டதும் ஆறாவது சுற்று சமாதானப் பேச்சுக்களில் இடம்பெற்ற புதிய திருப்பமாகவே கருதப்படவேண்டும்.

புலிகளுக்கு எதிராக பிரசாரப்படுத்தப்படும் - சிறுவர்களை இயக்கத்தில் சேர்த்தல் மற்றும் அதுபோன்ற - மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு, இத்தகைய செயல்களுக்கு எதிராகப் புலிகளை எழுத்தில் உறுதியளிக்கவைக்கும் - இணங்கவைக்கும் - நடவடிக்கையாக இந்த சாசனத்தைப் பயன்படுத்த முயல்கிறது அரசுத் தரப்பு.

அதேபோன்று தமிழினத்துக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஒரு பிரகடனத்தின் மூலம் இலங்கை அரசைக் கொண்டு அறிவிக்கச் செய்வதற்கு இந்த சாசனத்தை பயன்படுத்தத் திட்டமிடுகின்றது புலிகள் தரப்பு.

எது எப்படியென்றாலும் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் அடக்குமுறைகளை நிராகரிக்கும் ஒரு பிரகடனமாக இந்த சாசனம் அமையுமென எதிர்பார்க்கலாம்.

உயர்பாதுகாப்பு வலயங்கள் எனப் பிரகடனப் படுத்தப்பட்ட பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக - அவலப்படும் தமிழர்களின் சார்பில் - பலத்த குரல் எழுப்பப்பட்டுவருகின்றபோதிலும், இது ஓர் அடிப்படை உரிமை மீறல் செயற்பாடு என்ற பின்னணியில் அது முன்வைக்கப்படாமல் இருப்பதை நாம் கவனிக்கவேண்டும்.

தனக்குச் சொந்தமான இடத்தில் - தாயகத்தில் - குடியிருப்பதற்கும் அந்த நிலத்தையோ, வீட்டையோ பயன்படுத்துவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இது அடிப்படை உரிமை. அதனைப் பறித்து வைத்துக்கொண்டு, மக்களை அங்கு செல்லவிடாமல் தடுப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

எனவே, அரசு - புலிகள் செய்யவிருக்கும் அடிப்படை உரிமை தொடர்பான கூட்டுப் பிரகடனத்தில் தாயக பூமியில் குடியிருப்பதற்கான உரிமையும் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். அதுமட்டுமல்ல, அந்த உரிமை நிலைநாட்டப்படுவது உறுதி செய்யப்படவும் வேண்டும்.

தாயகப் பூமியில் இருந்து தமிழர்களை விரட்டி அடித்து, அந்தப் பிரதேசத்தை ஆக்கிரமித்து நிலை கொண்டு, மக்களை மீளக்குடியமர விடாமல் தடுத்து வைத்துக்கொண்டு மனித உரிமைகள் தொடர்பாகப் பிரகடனம் வெளியிடுவது கேலிக்குரியதாகிவிடும்.

நாட்டில் இப்போது அவசரகால நிலையோ அல்லது அதற்குக் கீழான பொதுசனப் பாதுகாப்புச் சட்டமோ நடைமுறையில் இல்லை.

எனவே, இந்தச் சமயத்தில் மக்களின் வாழ்விடங்களை - தனியாருக்கு உரிய உடைமைகளை - உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரிலோ அல்லது வேறு ஏற்பாடுகளின் கீழோ சுவீகரிக்கவோ, பலவந்தமாகப் பிடுங்கிப் பயன்படுத்தவோ முப்படையினருக்கு சட்ட அதிகாரம் இல்லை.

எனவே, இப்போது மக்களின் வாழ்விடங்களை படையினர் பலவந்தமாகக் கையகப்படுத்தி, ஆக்கிரமித்து, நிலைகொண்டிருப்பது முற்றிலும் சட்டவிரோதமான செயலாகும்.

ஆனால், எவரும் சட்டரீதியாக - சட்டமுறைகளின் கீழ் - இந்த அநீதிக்கு எதிராக நீதி கேட்டு கிளர்ந்தெழுந்ததாகத் தெரியவில்லை.

காணி எல்லைக்காக வீடு விற்று வழக்கு நடதது பவர்களையும், அத்தகைய வழக்குகளுக்காக நீதி மன்றில் வழக்காடுகின்ற திறமையான சட்டத்தரணிகளையும் கொண்டது நமது சமூகம்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆயிரக்கணக்கில் நமது மக்கள் நடுவீதியில் நிறுத்தப்பட்டிருக்கின்றார்கள். இந்த மனித உரிமை மீறல்களுக்காக நீதி தேவதையின் வாசல் கதவுகளைத் தட்டுவதற்கு நமது கறுப்புச் சட்டை நிபுணர்கள் ஒருவர் கூட தயாராக இல்லையா?

- இக்கோரிக்கை அவர்களுக்குச் சமர்ப்பணம்.

## குப்பிளான் வடக்குப் பகுதியில் பயிர்ச்செய்கைக்குத் தடை!

### விவசாயிகள் விசனம்

மல்லாகம்,மார்ச்24

குப்பிளான் வடக்குப் பகுதியில் தொடர்ந்து பயிர்ச் செய்கையில் ஈடுபடமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்கு அருகேயுள்ள விவசாயக் காணிகளில் தற்போது பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விளைச்சலை அறுவடை செய்த பின்னர் இப்பகுதியில் பயிர்ச்செய்கையில் ஈடுபடக்கூடாதென்று தமக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

அத்துடன் இப்பகுதியில் உள்ள பனை மற்றும் தென்னை மரங்களில் கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும் தமது தொழிலை தொடர்ந்து செய்ய முடியாத நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வாரம் இப்பகுதி விவசாயிகளை சீருடையினர் அழைத்து கூட்டமொன்றை நடத்தியதாகக் கூறப்படுகிறது. (ஒ-ரி)

## மாதர் மான்மியம்

லல்லி, லில்லி, ஜிம்மி, ஜிக்கி
லூசி, லோசி, லைசாலினி
நல்லதென்று இப் பேரைச் சூட்ட
நாடு நாசமாகிப் போச்சுது
வள்ளி, பொன்னி, செல்வி, சின்னியென்ற
வளமான பெயரை விட்டதேன்?

எள்ளி எம்மை ஈனம் செய்து
உலக தமிழர் சிரிக்கிறார்
மெள்ள இந்த பேரை இனி
மேன்மை பெற சூட்டுவீர்
கள்ளமற்ற தமிழர் பண்பை
காப்பது உமது கடமையே!

- விகடகவி.

### கடந்த யுத்த காலத்தின் போது

# கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதில் நஷ்டமடைந்தோருக்கு கடனுதவி!

### பிரதமர் பணிப்புரை என்கிறார் மகேஸ்வரன்

கொழும்பு,மார்ச்24

கடந்த காலங்களில் வடக்குக்குப பொருள்களுடன் வந்த சமயம் கடலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களில் பொருள் ஏற்றிவந்த வர்த்தகர்களுக்கு அரச வங்கிகள் ஊடாக மென்கடன் வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த பிரதமர் பணிப்புரை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அலரிமாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கூட்டம் ஒன்றில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் இது தொடர்பான பிரச்சினையை எழுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

'அஸ்ரோரியா', 'பிரின்ஸ் ஒவ் காஸ்', 'உகண' ஆகிய கப்பல்கள் குடாநாட்டுக்கு தேவையான பொருள்கள ஏற்றி வந்த சமயம் கடலில் மூழ்கியுள்ளன.

இந்தக் கப்பலில் பொருள்களை ஏற்றிவந்த வர்த்தகர்களது நஷ்டத்தை ஈடுசெய்ய எந்தவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. எனவே - அவர்களுக்கு மென் கடன் வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதமரிடம் கோரியதாகக் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு குறைந்த வட்டியில் மென் கடன் வழங்க 50 கோடி ரூபாவை அரச வங்கிகளுக்கு ஒதுக்குமாறு பிரதமர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார் என்று இந்து கலாசார அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-3)

### டோக்கியோ பேச்சுக்களில் இனங்காணப்பட்ட

# புனர்வாழ்வு உதவிகள் குறித்து ஆராய வாஷிங்ரனில் செவ்வாயன்று மாநாடு

### அமைச்சர்களான பீரிஸ், ரவி கருணாநாயக்க கலந்துகொள்வர்

வாஷிங்ரன்,மார்ச்24

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இடம்பெற்ற அரசு - புலிகள் பேச்சுக்களில் ஆராயப்பட்ட புனர்வாழ்வு உதவிகள் தொடர்பாக ஆராய்வதற்கான மாநாடு ஒன்று நாளை செவ்வாய்க் கிழமை வாஷிங்ரனில் இடம்பெறவுள்ளது.

அண்மையில் அமெரிக்காவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட விஜயத்தின்போது இணக்கம் காணப்பட்ட வர்த்தக உடன்பாடுகள் குறித்தும் -

டோக்கியோவில் நடந்த 6ஆம் கட்டப் பேச்சுக்களின் போது ஏற்பட்ட பலாபலன்களின் அடிப்படையில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தை டோக்கியோவில் கூட்டுவது குறித்தும் - இந்த மாநாட்டில் ஆராயப்படவிருக்கின்றது.

டோக்கியோ பேச்சுக்களில் கலந்துகொண்டபின்னர் அமெரிக்கா சென்றுள்ள இலங்கை சமாதானக் குழுவின் தலைவரும், அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்த மாநாட்டில் பங்குபற்றுவார். அவருடன் பங்குபற்ற வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் அங்கு செல்கின்றார்.

அமெரிக்க உயர்மட்டத் தலைவர்களையும் சந்திக்கவுள்ள அமைச்சர் பரிஸ் உலக வங்கி, சர்வதேச நாணயச் சபை, அரசசார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், அமெரிக்க ராஜதந்திரிகள், அதிகாரிகள் மத்தியில் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்தும் உரையாற்றுவார். (எ-3)

### நியமனம் வழங்கக் கோரி

# தொண்டர் ஆசிரியர்கள் அமைச்சருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனத்தை இழுத்தடிப்பது மாணவர்களின் கல்வி வளர்ச்சியை பாதிக்கும் செயலாகும் என்று தெரிவித்து வட மாகாண அதிபர்கள் சங்கம் கல்வி அமைச்சருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த காலங்களில் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாத நேரத்தில், ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருந்த காலங்களிலும் இடம்பெயர்ந்து இருந்த காலங்களிலும் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வேதனம் எதுவும் இன்றி அர்ப்பணிப்புடன் சேவையாற்றி பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் தொண்டர் ஆசிரியர்கள் என்பதை கல்விச்சமூகம் மறுக்கவோ மறக்கவோமாட்டாது.

இந்நிலையில், அவர்களுக்கு நியமனம் வழங்காமல் இழுத்தடிப்புச் செய்வது மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேலும் தடுக்கும் ஒரு செயலாகும்.

எனவே, மனிதாபிமான அடிப்படையில் இவர்களது நியமனத்தை உடன் வழங்க நடவடிக்கை எடுத்து பிள்ளைகளின் கலவி வளர்ச்சிக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ஒ-4)

### நாளை

பங்குனி 11
செவ்வாய்க்கிழமை
(25.03.2003)
திதி : அட்டமி
முற்பகல் 11.59வரை.
நட்சத்திரம: மூலம்
மாலை 5.51வரை.
சுபநேரம்: 10.45- 12.15
ராகுகாலம் : 3.15 - 4.45
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்பது, முன்னேற்றம் வேண்டாம் என்பதற்கு ஒப்பானதாகும்.

# கடற்பரப்பில் காவியமான மாவீரரின் அஞ்சலி நிகழ்வு

### வடமராட்சி கிழக்கில் நடந்தது

வடமராட்சி கிழக்கு,மார்ச்24

சர்வதேச கடற்பரப்பில் கடந்த 10ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட வர்த்தகக் கப்பலின் கப்டன் சிலம்பரசன் அல்லது றஞ்சன் (வேலாயுதம்பிள்ளை ஜெயறஞ்சன் - ஆழியவளை) என்ற மாவீரரின் அஞ்சலி நிகழ்வுகள் கடந்த வெள்ளியன்று வடமராட்சி கிழக்கில் நடைபெற்றன.

புனித உருவப்படம் அவரது ஆழியவளை இல்லத்திலிருந்து அலங்கார ஊர்தியில் எடுத்துச்செல்லப்பட்டு, வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆழியவளை சி.சி.தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது.

வீரவணக்கக் கூட்டம் நடைபெற்ற இடத்தில் பதினொரு மாவீரர்களினதும் புனித உருவப்படங்கள் அஞ்சலிக்கா வைக்கப்பட்டிருந்தன. இவ்வீரவணக்கக் கூட்டம் வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் அரசியற்துறையைச் சேர்ந்த யாழ்மன்னன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பொதுச்சுடரினை கடற்புலிகள் தளபதி மங்களேஸ் ஏற்றிவைத்தார். சிலம்பரசனின் புனித உருவப்படத்திற்கு அவரது பெற்றோர் ஈகச்சுடரினை ஏற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். ஏனைய மாவீரர்களின் புனித உருவப்படங்களுக்கு போராளிகளும் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் ஈகச்சுடரேற்றி மாலை அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

வீரவணக்கக் கூட்டத்தில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்குழுத் தலைவர் எஸ்.பொன்னம்பலம் ஆகியோர் உரையாற்றினர்.

அதன் பின்னர் சிலம்பரசனின் உருவப்படம் அலங்கார ஊர்தியில் எடுத்துச்செல்லப்பட்டு புதிதாக அமைக்கப்பட்ட உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்தில் நடுகைக்கல் அவரது பெற்றோரால் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது. (எ-182)

## சுழிபுரம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா

மேற்படி ஆலயத்தின் பொங்கல் விழா 18.03.2003 செவ்வாய்க்கிழமை விளக்குவைத்தலுடன் ஆரம்பமாகி உள்ளது.

முதலாம் பொங்கல் 25.03.2003 செவ்வாய்க்கிழமை இரண்டாம் பொங்கல் 01.04.2003 செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் வழமைபோல் நடைபெறும். பொங்கல் நிகழ்வுகளில் அடியார்கள் பங்குபற்றி அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சுழிபுரம்
பத்திரகாளி அம்பாள்
தேவஸ்தான பரிபாலன சபை. (15862)

## திருமண ஒரு வருட பூர்த்தினை வாழ்த்து



### விஜயமோகன் சபாநந்தினி

தம்பதிகள் மணமங்கள வாழ்வில் ஒன்றிணைந்து இன்று (24.03.2003) திங்கட்கிழமை ஒரு வருட நிறைவுடன் சகல வளமும் பெற்று வாழும் இவர்களைப் பல நலமும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*இராசாவின் தோட்டம்,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (15839)

வாழ்த்துவோர்கள்:
**அப்பா, அம்மா, சகோதரர்கள்.**

## *சினி* யாத்ரா

### இலங்கை திரைப்பட விழா - 2003

***மார்ச் 26-30***

**கைலாசபதி கேட்போர் கூடம்**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்**

மார்ச் 26 பி.ப. 4.00 - *நிதானய (புதையல்)*
லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ்
மார்ச் 27 பி.ப. 4.00 - *சந்தகின்னரி (நிலவுப் பெண்)*
அசோகா ஹந்தகம
மார்ச் 28 பி.ப. 4.00 - *புரசந்த கலுவற*
*(ஒரு பூரணையில் மரணம்)*
பிரசன்ன விதானகே
மார்ச் 29 காலை 10.00 - *தீர்த்த யாத்ரா*
வசந்த ஒபேசேகர
பி.ப. 2.00 - *மத்துயம் தவச*
*(எதிர்காலத்தில் ஏதோ ஒரு நாள்)*
தர்மசேன பத்திராஜ
பி.ப. 4.30 - *பொன்மணி (தமிழ்)*
தர்மசேன பதிராஜ
மார்ச் 30 காலை 10.00 - *பவதுக்க (பாகம் 1)*
தர்மசிறி பண்டாரநாயக்க
பி.ப. 2.00 - *பவதுக்க (பாகம் 11)*
பி.ப. 4.30 - கருத்தரங்கு

பங்கேற்போர் வசந்த ஒபேசேகர *(திரைப்பட இயக்குநர்)*
தர்மசேன பத்திராஜ *(திரைப்பட இயக்குநர்)*
பிரசன்ன வித்தானகே *(திரைப்பட இயக்குநர்)*
அசோக ஹந்தகம *(திரைப்பட இயக்குநர்)*
தர்மசிரி பண்டாரநாயக்கா *(திரைப்பட இயக்குநர்)*

**Presented by:**
TrikonE
அனுமதி இலவசம்

**in association with Extra Mural Studies Unit in University of Jaffna,**
**NEP / Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs and Asian Film Centre.**
**Sri Lanka.**
(15863)

## உடுத்துறையில் மாவீரருக்கு துயிலும் இல்லம்

வடமராட்சி,மார்ச்24

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை புதிதாக மாவீரர் துயிலும் இல்லம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வைபவம் மாவீரர் பணிமனைத் துணைப் பொறுப்பாளர் செல்வி அர்ச்சனா தலைமையில் நடைபெற்றது. பொதுச்சுடரினை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தீபன் ஏற்றிவைத்தார். ஈகச் சுடரினை மூன்று மாவீரர்களின் தாயாரான திருமதி தில்லைநாயகம் ஏற்றிவைத்தார்

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் தேசியக் கொடியினை ஏற்றிவைத்ததுடன், மாவீரர் துயிலும் இல்லத்தையும் திறந்து வைத்தார். (எ-82)

## புகையிலைச்செய்கை வலி.கிழக்கில் பாதிப்பு!

அரியாலை,மார்ச்24

குடாநாட்டில் தற்போது பரவலாகப் பெய்துவரும் மழையினால் வலி.கிழக்குப் பிரதேசத்தில் புகையிலைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பலத்த மழை பெய்ததையடுத்து புகையிலைப் பயிர்கள் வெளிறிக் காணப்படுகின்றன.

தொடர்ந்து மழை பெய்தால் தோட்டங்களில் பயிரிடப்பட்டிருக்கும் புகையிலைப் பயிர்கள் முற்றாக பாதிக்கப்பட்டுவிடலாம் என்றும் - விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

## பொதுசன மாதாந்த உதவிப்பணம்

வரணி,மார்ச்24

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கான மார்ச் மாத பொதுசன மாதாந்த உதவிக்கொடுப்பனவுகள் உரிய தபாலகங்களான சாவகச்சேரி, கொடிகாமம் ஆகியவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

உரிய கொடுப்பனவுகளை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - தென்மராட்சிப் பிரதேச செயலக சமூகசேவைப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இவற்றுள் காசநோய், புற்றுநோய் கொடுப்பனவுகளும் அடங்கும் என்றும் - கூறப்பட்டது. (எ-180)

## சீருடைத்துணி விநியோகம்

தென்மராட்சி,மார்ச்24

பளைப் பிரதேசத செயலர் பிரிவுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் வழங்கல் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பச்சிலைப்பள்ளி பல நோ.கூ.சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பளைப் பிரதேச செயலர் அலுவலகத்தினுடாக விண்ணப்பித்தவர்கள் இவ்வாறு சீருடைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என நிர்வாக உத்தியோகத்தர் தா.சுவாமிநாதன் அறிவித்துள்ளார். (எ)

## ஊடகத்துறை அமைச்சர் வேண்டுகோள்

நிரந்தர சமாதானத்தை இந்த நாட்டில் ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இவ்வேளையில், மக்கள் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் 40 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள தபாலகக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானத்தை முன்னெடுப்பதில் பெரும் தியாகங்களைச் செய்யவேண்டியுள்ளன. அதேவேளையில் சமாதானப் பேச்சுகளால் தற்பொழுது நல்ல பயன்கள் கிடைக்க ஆரம்பித்துள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு ஜப்பானில் நடைபெற்ற பேச்சுகளின் போது புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று கூறிய அமைச்சர், ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதல் குறித்தும் தனது கவலையைத் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி லலிதா சண்முகலிங்கம் அவர்களின் தாயார்

### திருமதி மகேஸ்வரி பொன்னுத்துரை

அவர்கள் கொழும்பில் காலமானதையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.* (15890)
அதிபர், ஆசிரியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியை

### திருமதி பானுமதி துரைச்சாமி

அவர்கள் லண்டனில் காலமானதையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.* (15889)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

| 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி | முதலாம் ஆண்டு நினைவஞ்சலி |
| --- | --- |
|  |  |
| அமரர் | அமரர் |
| **மாணிக்கன் சபாபதி** | **சபாபதி சின்னக்கிளி** |
| பிறப்பு 15-10-1924 | பிறப்பு 10-11-1931 |
| இறப்பு 18-03-1998 | இறப்பு 03-04-2002 |
| திதி: 22-03-2003 | திதி 24-03-2003 |

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:

*கருணாநிதி ச.ச.நிலையத்தடி, வல்வெட்டி.*
**குடும்பத்தினர்.** (15799)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கமுத்து கந்தையா

மலர்வு 21-02-1919 | உதிர்வு 24-03-1999

அன்பின் திருவுருவே
பண்பின் உறைவிடமே!
வாழ்வின் வழிகாட்டியே
குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எமது ஆருயிர் தெய்வமே!
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எம் துயரம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*'அன்னை இல்லம்' வியாபாரிமூலை, பருத்தித்துறை.*

பிரிவால் துயருறும்:
**அன்புக் கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.** (15820)

# பாடசாலைகளின் தர வேறுபாடுகளை அகற்றுவது கல்வி வளர்ச்சிக்கு அவசியம்!

*கல்வி வளர்ச்சி தொடர்பாக சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாலயம் வெளியிட்ட ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.*

பெற்றோரின் அல்லது மக்களின் எதிர்பார்ப்பு தங்கள் குழந்தைகள் முன்னணிப் பாடசாலையில் படிக்க வேண்டும் என்பது ஆகும். அது நியாயமானதும் சரியானதும் ஆகும். அங்கு வளர்ச்சி என்பது படிப்புத் தராதரத்தையும் பொதுத்தேர்வில் மாணவர் எய்தும் பெறுபேற்றையும் அடிப்படையாகக் கொண்டது. நகர்ப்புறங்களில் சில பாடசாலைகள் தனியார் பாடசாலைகளாக அல்லது கல்வித்திணைக் களத்தின் சில கட்டுப்பாடுகள் குறைந்த பாடசாலைகளாக தொழிற்படுகின்றன. அவற்றுக்கு வேறு வகையிலும் நிதி உதவி கிடைக்கலாம். பணமானது சிறந்த கட்டட அமைப்பை உருவாக்க உதவும்.

வேறு பார்வையில் நோக்கும் போது தரமான ஆசிரியர்களை கூடுதலான சம்பளத்துக்கு நியமிக்கின்றார்களே எனக் கேட்கவும் தோன்றுகிறது. எவ்வாறாயினும் நடைமுறையில் அவை தரமான பெறுபேற்றை கொண்டுவருகின்றன. அது எவ்வாறு நிகழ்கிறது? ஏன் மற்றைய பாடசாலைகள் சிறந்த பெறுபேற்றை பெறமுடியாமல் போயிற்று?

முன்னணிப் பாடசாலைகள் என்று குறிப்பிடுபவை, மாணவர்களை சேர்க்கும் போது தரம் பார்த்தே மாணவர்களைத்தான் சேர்க்கின்றன. சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் அல்லது வேறு வகையாக நன்றாகப் படித்த குடும்பங்களிலிருந்து வந்த குழந்தைகள்தான் சேர்க்கப்படுகின்றார்கள். அதாவது ஆரமபம் தரமாக உள்ளது. பின் சிறந்த படிப்புச்சூழ்நிலை கொடுக்கப்பட்டு, சிறந்த பெறுபேற்றைப் பெற ஏதுவாகிறது.

தரமான பாடசாலை என்பது சிறந்த பெறுபேற்றைக் கொடுக்கும் பாடசாலையாகும். அதற்குப் பின்வரும் அம்சங்கள் தேவையாகும்.

★ நல்ல தரமான சூழலிலிருந்து கிடைக்கப்பெற்ற மாணவர்கள்.

★ நல்ல மக்களை உருவாக்க வேண்டுமென்ற கருத்துள்ள; போதனையில் அக்கறையுள்ள தரமான ஆசிரியர்கள்.

★ மாணவர்கள் மீதும் பாடசாலை மீதும் அக்கறையுள்ள பெற்றோர்கள்.

★ மாணவர்களின் கற்றல் தேவைக்கு தேவையான பொருள்களைக் கொண்ட பாடசாலை என்பனவே அவையாகும்.

குடாநாட்டில் கல்வி வளர்ச்சி பின்தங்கியுள்ளதாக கவலைகள் வெளியிடப்படுகின்றன. இதேவேளை, சில முன்னணிப் பாடசாலைகள் மீதான மோகம், பல பின்தங்கிய பாடசாலைகளை மூடும் நிலைமைக்கு கொண்டு செல்கின்றன. இதனால் சமூகத்தின் ஒரு சாராருக்கு மட்டுமே தரமான கல்வி என்பது சாத்தியமாகிறது. மற்றவர்களுக்கோ அது எட்டாக்கனியாகிவிடுகிறது. இந்த நிலைமை மாறி சகலருக்கும் தரமான கல்வி கிட்டச் செய்வதே கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் ஆரோக்கியமான வழியாகும்.

மேற்கூறப்பட்டவற்றை சுருக்கமாக எழுதினால்,

☆ மாணவர்கள்
☆ ஆசிரியர்கள்
☆ பெற்றோர்கள்
☆ பாடசாலை
☆ அதிபர்

**மாணவர்கள்:**

மாணவர்கள் காலையில் எழுந்து சீருடையணிந்து பாடசாலை செல்கிறார்கள். தாங்கள் எவ்வாறு உருவாகப் போகிறோம் என்பது பற்றியும் சொல்லத் தெரியாது. என்ன தொழில் தேவை என்பது பற்றியும் சொல்லத் தெரியாது. எல்லோரும் படிக்கின்றார்கள் நாமும் படிப்போம் என்று பாடசாலை போகிறார்கள். மாணவர் சிலர் பெற்றோரின் பேச்சுக்களிலிருந்து தப்புவதற்கு கூட பாடசாலை வருகின்றார்கள். பொதுவாக மாணவப்பருவம் அப்படித்தான் உள்ளது. வேறு தேசங்களில் பொதுவாக இப்படியல்ல. மாணவர்களின் போக்குவரத்துக்கு சிறப்பான சாரதியும், பருகுவதற்குப் பலவகையான பானங்களும் சிறப்பான உணவுகளும் எனப் பலவகையான ஏற்பாடுகள் உண்டு. ஆனால் யாழ். குடாநாட்டில் வேறு நாடுகளோடு ஒப்பிடும்போது மாங்காய்களும், நெல்லிக்காய்களும் கூட தங்களுடைய உணவுத் தேவைக்காக மாணவர்கள் கொண்டு வருவதைத் தற்போதும் காணலாம். பாடசாலைக்கு என்ன கொண்டு போகிறோம்? திரும்பிப் போகும் போது என்ன கொண்டு வருகின்றோம் எனக் கவனிப்பது குறைவு. வகுப்பில் கற்பிக்கும் போது எல்லோரும் ஒரே மாதிரி கிரகிக்க மாட்டார்கள். ஆசிரியரிடம் தனக்கு தெரியாததைக் கேட்பதில்லை. பாடசாலைக்கு வந்தோம் மீண்டும் போகிறோம் என மனைக்குப் போகிறார்கள். மனையிலும் பாடசாலையில் என்ன படித்தோம் என்பதை பெரும்பாலான மாணவர்கள் பார்ப்பதில்லை.

ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், பயிலுநர் ஆசிரியர்கள் என வகைப்படுத்தலாம்.

**பட்டதாரி ஆசிரியர்**

பொதுவாகப் பார்க்கும்போது பல்கலைக்கழகம் சென்றோ வேறு வகையிலோ, இவர்கள் பட்டம் பெற்றிருக்கலாம். ஆரம்பத்தில் கலைப்பட்டதாரிகள்தான் தகைமை கூடியவர்கள்; திறமையானவர்கள் எனக் கருதப்பட்டனர். ஆனால், வர்த்தகப் பட்டதாரிகள் அண்மையில் அதிகரித்துள்ளனர்.

மேலே கூறப்பட்டவர்கள் தரமானவர்கள் திறமையானவர்கள்தான். ஆனால், இவர்களில் பலரும் மாணவர் மட்டத்துக்கு கீழ் வந்து, போதிக்க பொதுவாக ஆர்வமில்லாதவர்கள். மழை பொழிவது போல பொழிவார்கள் மாணவர்கள் அந்த மழையில் நனைவார்கள்

**பயிற்றப்பட்ட,**
**தொண்டர் ஆசிரியர் வகை**

மாணவர்களின் நலன் கருதி பாடசாலை துணை அமைப்புகள், அதிபரின் வாழ்த்தோடு மாணவர்களுக்கு போதிக்க நியமிக்கப்பட்டவர்கள் இந்தவகையினர். அவர்களுக்கு மாதச் சம்பளம் பொதுவாகக் கொடுப்பதில்லை. வேறு அமைப்புக்கள் பணம் கொடுக்கும்போதுதான் அவர்களுக்கு கிடைக்கும். பொதுவாக தங்களால் கூடிய மட்டும் போதிப்பார்கள். போதிப்பதில் ஆர்வமுள்ளவர்கள். ஆசிரியர் தொழில நிரந்தரமாகக் கிடைக்கும் மட்டும் தொடர்ந்து அதே வண்ணமிருப்பார்கள். கிடைத்ததன் பிறகு சிலர் மட்டும் தான் நன்றாகப் போதிப்பார்கள். நடைமுறையில் மாணவர்களுக்கு சிறப்பாகப் போதிப்பார்கள். அவர்களுக்கு பாடசாலையில் போதிக்கும்போது ஏனைய ஆசிரியரிடமிருந்து அல்லது வேறு அமைப்புகளிடமிருந்து பணம் திரட்டிக் கொடுப்பது நல்லது.

**பெற்றோர்கள்**

பெற்றோர் எனின் பாடசாலையில் கற்கும் மாணவர்களின் பெற்றோர்களையே குறிக்கும். சிலருக்கு எத்தனை குழந்தைகள் எனக் கேட்டால் அப்போதுதான் எண்ணுவார்கள். எல்லாப் பெற்றோரும் தங்களைவிடக் கூடுதலாகப் பிள்ளைகள் படிக்கவேண்டும் என்பதில் ஆர்வம் உள்ளவர்கள். பொதுவாக தங்கள் குழந்தைகள் கற்க வேண்டும்என்பதற்காக எவ்வளவு காசையும் செலவுசெய்யத் தயாராக உள்ளவர்கள். தங்களின் செய்கை குழந்தைகளை உருவாக்குவதில் கணிசமான பங்குவகிக்கிறது என்பதைப் பலர் புரியாதவர்கள். குழந்தைகளின் செய்கையில் பல நன்மையும், நன்மை அல்லாததும் பெற்றோரிலிருந்துதான் கூடுதலாக பின்பற்றப்படுகிறது என்பதை பெற்றோர்கள் புரிய வேண்டும்.

பெற்றோர்கள் சுத்தமாகக் காணப்பட்டால் குழந்தையும் சுத்தம் பேணும். பெற்றோர் காலையும் மாலையும் வழிபாடு நடத்தினால் குழந்தையும் வழிபடும். பெற்றோர் கெட்டசொற்கள் சொன்னால் குழந்தையும் சொல்லும்.

பெற்றோர் குழந்தையை பாடசாலைக்கு அனுப்பும் போது சுத்தமாக அனுப்பவேண்டும். குழந்தைக்கு தேவையான பென்சில், கொப்பி போன்றவற்றை வாங்கிக்கொடுப்பதில் ஆர்வம் செலுத்தவேண்டும். குழந்தை அன்று கற்றதை அன்றே பார்க்கச் செய்யவேண்டும். குழந்தை புத்தகம் கொப்பிக்கு உறை போடுவதை கவனிக்கவேண்டும். தேவையானபோது கொப்பிகளைப் பார்க்கவேண்டும். பாடசாலையோடு தொடர்புள்ள கூட்டங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் செல்ல வேண்டும். பெற்றோர் பாடசாலையைப் பற்றி கருதும்; நிறைவு; நிறைவல்லா தவற்றை அதிபருடன் பேசவேண்டும். பெற்றோர் பிள்ளைகளுக்கு சொந்தமாக வைத்திருக்க ஒரு பொருளைக் கொடுத்து, அது தன்னுடைய பொருள் என வைத்திருக்கப் பழக்க வேண்டும். பிள்ளையின் வயது கூடுதலாக அமைந்தால் தானும் குடும்பத்தில் பிரதான மானவர் எனக் கருதும்படி சம்பிரதாயத்துக்காவது சில கருத்துகளைக் கேட்கவேண்டும். பிரதானமாக மக்களுக்காக உழைத்த பெரியாரின் உருவம், அவரின் வரலாறு என்பவற்றை வாசிக்கச் செய்ய வேண்டும். பொறுப்புக்களை ஒப்படைத்து அதனை நடத்தப் பழக்கவேண்டும்.

**ஆரம்பப் பாடசாலை**

ஆரம்பப் பாடசாலைகள் பொதுவாக கிராமப் புறங்களில் காணப்படுகின்றன. இப்பாடசாலைகள் பலவற்றுக்கு ஒழுங்கான கதவு அமையாது காணப்படும். பாடசாலையைப் பாதுகாக்க மதிலோ வேறு ஒழுங்கோ காணப்படாது. திணைக்களம் தூர அமைந்துள்ளது எனக் கருதுவதனால் ஆசிரியர்கள் சிலவேளை நேரம் தாழ்த்தி வரலாம். மொத்தமாகச் சரியான கருத்தை மாணவர்களுக்கு கொடுக்க வேண்டிய பாடசாலை, 'பாடசாலை என்றால் இப்படித்தான்' என்ற தவறான கருத்தினை மாணவருக்கு கொடுக்க வேண்டியிருக்கும். அதன் காரணமாகப் பல பெற்றோர் தங்கள் குழந்தைகளை நகரப்புறப் பாடசாலைகளில் சேர்க்கவே முயற்சிப்பர்.

**கல்லூரி**

மாணவரின் படிப்புத் தராதரத்தினை அதிகரிப்பதில் பெரும் பங்குவகிப்பது. பெருந்தொகையான மாணவர்களை தன்னகத்தே கொண்டுள்ளது. ஒப்பீட்டுரதியில் பரந்த நிலப்பரப்பைக் கொண்டது. தொகையான ஆசிரியர்களையும், நூலகம் போன்றவற்றையும் கொண்டது. தரமான ஆற்றலுள்ள ஆசிரியர்களையும் பெருந்தொகையான மாணவர்களையும் கொண்டது.

**அதிபர்**

அதிபர்களை மூன்று வகைகளில் அடக்கலாம்.

✪ தரப்பட்ட பாடசாலையை தொடர்ந்து அதே மட்டத்தில் வைத்திருக்கும் அதிபர்.

✪ தரப்பட்ட பாடசாலையை வளர்ச்சியடையச் செய்யும் அதிபர்.

✪ தரப்பட்ட பாடசாலையை தரக்குறைவு அடையச்செய்யும் அதிபர்.

என்பனவே அவையாகும்.

அதிபரை நியமிக்கும்போது தராதரத்துடன்கூடிய நீண்ட சேவைக்காலம், எல்லோரையும் கவரும் ஆற்றலுள்ள, சிறந்த நிர்வாகம் என்பவற்றை அடிப்படையாகக்கொள்வது பயனளிக்கும். அதிபர் மாணவர்களுக்கு மட்டுமல்ல ஆசிரியருக்கும் எடுத்துக்காட்டாகத் தொழிற்பட வேண்டும்.

---

**வடக்கு - கிழக்கு சிறைகளுக்கு மாற்றும்படி**

## களுத்துறை தமிழ்க் கைதிகள் சட்டமாஅதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்24

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 32 தமிழ் அரசியல் கைதிகள் தம்மை வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து கைதிகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் விண்ணப்பம் ஒன்றினையும் சமர்ப்பித்துள்ளனர்.

அகில இலங்கை தமிழக் காங்கிரஸின் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி இந்த விண்ணப்பத்தினைப் பெற்று சட்டமா அதிபர் திணைக்களத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இதேவேளை -

மேற்படி கைதிகளை வடக்கு - கிழக்கு சிறைச்சாலைகளுக்கு மாற்றி அவர்களின் விடுதலைக்கு வழிசெய்ய வேண்டும் என சட்டமா அதிபர் திணைக்களத்திடம் விநாயகமூர்த்தி எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

(எ-12)

---

# கல்விச்சாலை காட்சிகள்



புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலய மெய்வன்மைப் போட்டிகளில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.இந்துக் கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம் மாணவி ஒருவரிடம் வெற்றிக்கேடயத்தைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர் நா.பஞ்சலிங்கம் காணப்படுகின்றார். (எ-88)



யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலய மெய்வன்மைப் போட்டிகளில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், வித்தியாலய அதிபர் திருமதி எவ்.சின்னத்துரை மற்றும் பாடசாலைச் சமூகத்தினரால் வரவேற்று அழைத்துச் செல்லப்படுவதை படத்தில் காணலாம். அருட்திரு மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளும் காணப்படுகிறார். (எ-30)



வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடா வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர் திருமதி ம.குமாரகுலசிங்கம் காணப்படுகின்றார். (எ)



யாழ்.மத்திய கல்லூரியின் ஆரம்ப பிரிவு மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. அந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வர்த்தகபீட விரிவுரையாளர் எஸ்.சிவராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். கல்லூரி அதிபர் க.இராசதுரை, ஆரம்ப பிரிவு தலைவர் செல்வி ஆர்.இராமலிங்கம் ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

யாழ். மானிப்பாய் வீதியிலிருந்து 100 யார் தூரத்தில் இணுவில் வீதியில 3 பரப்பில் சகல வசதிகளுடன்கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நபாலேந்திரன், இணுவில் வீதி, மானிப்பாய், T.P.: 0777 739141.(15772)

## விற்பனைக்கு

BAJAJ SCCOTER S.L. 125 Self Start மொடல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: M.P.கணேசலிங்கம், 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021-222 5595 (15871)

## ஆடு விற்பனைக்கு

இன்னும் ஐந்து நாள்களில் குட்டி ஈனக்கூடிய $3\frac{1}{2}$ போத்தல் பால் தரக்கூடிய சனல் ஆடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 57, K.K.S. வீதி (கொக்குவில் சந்திக்கும் பூநாரி மடத்தடிக்கும் இடையில்). (15888)

## நாய்க்குட்டிகள் விற்பனை

காவலுக்குரிய அழகான Great Dane X Dobermann நாய்க்குட்டிகள விற்பனைக்கு உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (15814)

## இறைச்சிக் கோழி

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1Kg- 120/- சுத்தம் செய்தல் இலவசம். மான்ஸ் பாடசாலை வீதி, டச்சுறோட், உடுவில் (15898)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பப் பட்டதாரி அரச ஆசிரியைக்கு செவ்வாய் தோஷமுள்ள படித்த அரச, கூட்டுத்தாபன மணமகன் விரும்பத்தக்கது. யாழ்.நகரில் வீடும் தகுந்த சீதனமும் வழங்கப்படும். விள.இல. 1825, C/O, உதயன், யாழ்ப்பாணம். (15894)

## மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1965, 1972 M.B.B.S. Doct-ors, 1969 ஆசிரியர், 1968 B.Sc. ஆசிரியர், 1972 அலுவலக உதவியாளா ஆகியோருக்கு அழகிய மணப்பெண்கள் தேவை தொடர்பு: கிருஷ்ணா திருமணசேவை, செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (15879)

## எங்கள் நாடு

350 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் பரிசுபெற்ற வானொலி நாடகங்கள் நாம் வாழுகின்ற இன்றைய வாழ்க்கையைச் சித்திரிப்பவை; மாணவர்கள நாடகம் நடிக்கவும் படிக்கவும் ஏற்றவை ரூபா 75. (15859)

## இந்திய யாத்திரை

தென்னிந்தியா, ஆந்திரா, கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரியிலுள்ள 60இற்கும் மேற்பட்ட புண்ணிய புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களை தரிசிக்கலாம். யாத்திரை நாளகள் பாடசாலை விடுமுறைதினத்தை முன்னிட்டு ஏப்ரல் 25ஆம் திகதி தொடக்கம் 15 அல்லது 17 நாள்கள் வரை ஆகும். ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.T.ஸ்ரீரெங்கநாதன். T.P.: 0777-680102 (37033)

# நல்வாழ்த்துக் கூறுகின்றோம்



அச்சுவேலி "வீரகேசரி"
சி.செல்லத்துரை இராசேஸ்வரி
தம்பதியினரின் அருமைப் புதல்வரும்
உரும்பிராய மேற்கு
கிராம உத்தியோகத்தருமான (J/263)

**திரு. செ.செல்வச்சந்திரன்**

அவர்கள் அச்சுவேலி, காட்டுமலைக் கந்த சுவாமியின் திருவருளால் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றதை அறிந்து நாம் அனைவரும் மகிழுகின்றோம். நல்வாழ்த்துக் கூறுகின்றோம்.

10.02.2001இல் உரும்பிராய் மேற்கு கிராமசேவையாளராக இடமாற்றம பெற்றுவந்த இவர், வியத்தகு சேவையின்மூலம் மக்கள் மனதில் நிறைந்துள்ளார். அன்னவர் சேவையின்மூலம் இன்னுமின்னும் பல பதிவியுயர்வுகளைப் பெற்று உயர்ச்சி அடைய அருளும்வண்ணம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(15890) - உரும்பிராய் மேற்கு அன்பர்கள்.



உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
துல்லியமாகவும்
துரிதமாகவும்
குறைந்த கட்டணத்தில்
கொம்பியூட்டர் மூலம்

**INTERNETஇல்**

தொடர்புகொள்ள:
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால் / பொதிகள் சேவை
மேலும் விவரங்களுக்கு:

**SRI MURUGAN**
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA.
T.P.: 021-222 2670, 222 3588 FAX: 222 3214
E-MAIL: del-smskr@eureka.lk
(சி-37030)

# அன்பளிப்பும் பாராட்டும்

மீசாலை மேற்கைச் சேர்ந்த
**இரத்தினகுமார் - விஜயரஞ்சினி**
குடும்பத்தினர் லண்டனில் இருந்து வருகை தந்தபொழுது கிளிநொச்சி குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லத்துக்கு அன்பளிப்பாக ரூபா 50,000/= வழங்கியமையைப் பாராட்டுகிறோம்.

லயன் சி.சற்குணநாதன்
Rtd.T.A.
*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (15897) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை (மூப்பர்)

சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை (மூப்பர்) அவர்கள் நேற்றுமுன்தினம் (22.03.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - விக்ரோறியா தம்பதியினரின் அன்பு மகனும் காஞ்சென்ற யோசப் - வரோனிக்கா தம்பதியினரின் அன்பு மருமகனும் திரேசம்மா (றெஜினா)வின் அன்புக் கணவரும் அஞ்சலா, ஜெயா, ஜெறா (பிரான்ஸ்), கமலா, திலகம் (கொலண்ட்), பிறேமா, அருந்ததி (கனடா), அழகு (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் காலஞ்சென்ற ஜேசுராஜா, காலஞ்சென்ற சின்னத்தம்பி, பவானி (பிரான்ஸ்), அன்ரன், யோசவ் (கொலண்ட்), ராசு, சூசைதாஸ் (கனடா), றொறின் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சூசைப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்), மேரிப்பிள்ளை, காலஞ்சென்ற எலிசபெத் மற்றும மொனிக்கா ஆகியோரின் அன்புச் சகோதரரும் அழகுறாணி, ராசு, ராசா, சவிரிப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*மவுண்கார்மேல் வீதி,* தகவல்:
*யாழ்ப்பாணம்.* (15900) அஞ்சலா (மகள்)

# நற்செயல்கள் புரிவோம்!

"நான் உறுதியாக உங்களுக்குச சொல்கிறேன் இறைவாக்கினர் எவரும தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை" (லூக்:24)

தவக்காலத்தின் இருபதாம் நாளில் காலடி எடுத்து வைக்கும் எமக்கும் இன்றைய இறைவார்த்தை புது உற்சாகத்தை ஊட்டுகிறது.

நாங்கள் எங்கள் பகுதிகளில் பல நல்ல செயல்களில் ஈடுபடும் பொழுது

## தவக்கால சிந்தனை இருபதாம் நாள்

எமக்கு பல எதிர்ப்புகள் ஏற்படும் அந்த எதிர்ப்புக்களைக் கண்டு நாம் அச்சமடைவதுடன் அச் செயல்களிலிருந்து பின்வாங்கவும் முற்படுகின்றோம். இந் நிலையில்தான் மேற்கூறிய இறை வார்த்தை எமக்குத் தரப்படுகிறது.

எமக்கு எதிர்ப்பு ஏன் வருகிறது? நாம் ஒரு நல்ல செயல்களைச் செய்யும் போது எமது ஊரில் வாழ்பவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இப்பிரச்சினை இன்று மட்டும் ஏற்பட்டதல்ல: அன்றும் ஏற்பட்டது. இயேசு கிறிஸ்து பல நல்ல செயல்களை செய்தபோது அவர் செய்த நல்ல செயல்களை பார்க்காது இவர் எங்களை விட பெரியவனாகி விடுவாரே? என்ற பொறாமையால் அவரை ஒதுக்கினர்.

இயேசு கிறிஸ்துவின் நல்ல செயல்களை மேலும் அனுமதிக்க முடியாத அவர்கள் அவரை சிலுவையில் அறையக்கூடத் தயங்கவில்லை. ஆயினும் இறுதியில் கூட இயேசு கிறிஸ்து இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும் என்று

**சி.சி.கொலிந்திரன்**

ஒரு நல்ல செயலையே செய்கிறார்.

எனவே நாம் ஒவ்வொருவரும் எதிர்ப்புக்கு அஞ்சாது நல்ல செயல்களில் ஈடுபட்டு உண்மையான கிறிஸ்தவர்களாக கிறிஸ்துவின் வாழ்வை பிரதிபலிப்பவர்களாக வாழ முயற்சிப்போம்.

# புறநிலைப் படிப்புகள் அலகு
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# EXTRA - MURAL STUDIES UNIT
# UNIVERSITY OF JAFFNA

## 2003/2004 கல்வியாண்டிற்கான அடிப்படைக் கற்கைநெறிகள்

*Foundation Courses for the academic year 2003/2004*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு பின்வரும் தலைப்புகளில் பொது விரிவுரைகளையும் அடிப்படைக் கற்கை நெறிகளையும் 2003/2004 கல்வியாண்டில் நடத்தவுள்ளது. இவை சனி, ஞாயிறு தினங்களில் பல்கலைக் கழகத்தில் மு.ப.9.00முதல் 12.00 மணிவரை இடம்பெறும். இக்கற்கை நெறிகளைப் பயில சான்றிதழ்கள் எதுவும் தேவையில்லை. ஆர்வமே தகுதியாகக் கொளளப்படும். 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் எவரும் தமது முகவரியுடன்கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிவரக் கோவையை இணைத்து அடிப்படைக் கற்கைநெறியின் தலைப்பைக் குறிப்பிட்டு தனித்தனியாக விண்ணப்பிக்கலாம். ஒருவர் எத்தனை கற்கை நெறிகளுக்கும் விணணப்பிக்கலாம். ஒரே நேரத்தில் ஒரு கற்கைநெறியைபயில மாத்திரம் அனுமதிக்கப்படுவர். குறித்தவொரு கற்கைநெறிக்குப் போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுமிடத்தே (ஏறத்தாழ 40பேர்) கற்பித்தல் இடம்பெறும். அடிப்படைக் கற்கைநெறி ஒன்று குறைந்தது 40 மணித்தியாலக் கற்கைக் காலத்தைக் கொண்டது. பதிவுக்கட்டணமாக ரூபா 200 செலுத்துதல் வேண்டும். பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட பொது விரிவுரைகள் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும். பொது விரிவுரைகளுக்கு கட்டணம் எதுவும் செலுத்தவேண்டியதில்லை.

1.0 பொது விரிவுரைகள்
**Public Lectures**
- 1.1 சுகவாழ்வு Healthy Life
- 1.2 பொதுப் போக்குவரத்து வீதிமுறைகள். Public Transport Regulations

2.0 அடிப்படைக் கற்கைநெறிகள் பின்வருமாறு:
- 2.1 தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (அடிப்படை) English for communication (Basic)
- 2.2 தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (உயர்தரம்) Enlish for communicaton (advanced)
- 2.3 அலுவலகத்தில் பணிபுரிவோருக்கான ஆங்கிலம் English for office staff
- 2.4 முன்பள்ளிக் கல்விக்கான ஆங்கிலம் English for pre-school Education
- 2.5 முன்பள்ளிக் கல்வி Pre-school Education
- 2.6 மனித உரிமைகள் Human Rights
- 2.7 பெண்களும் அபிவிருத்தியும் Women & Development
- 2.8 இளைஞரும் அபிவிருத்தியும் Youth & Development
- 2.9 குழந்தைகளும் அபிவிருத்தியும் Children & Development
- 2.10 புவிக்கோள மயமாக்கலும் அபிவிருத்தியும் Globalization & Development
- 2.11 கலாசாரமும் அபவிருத்தியும் Culture & Development
- 2.12 பேண்தகு அபிவிருத்தி Sustainable Development
- 2.13 அலுவலக முகாமைத்துவம் Office Management
- 2.14 இதழியல் Journalism
- 2.15 விவசாய உற்பத்தித்திறன் மேம்பாடு Increasing Agricultural Productivity
- 2.16 உணவகங்களின் முகாமைத்துவம் Restaurant Management
- 2.17 தாதிப் பராமரிப்பும் முதலுதவியும் Nursing & First Aid
- 2.18 விலங்கு வளர்ப்பு, கோழி வளர்ப்பு அபிவிருத்தி Animal husbandry & Poultry Development
- 2.19 மொழிபெயர்ப்புக் கலை Art of Translation
- 2.20 நூலகவியல் Library Science

3.0 புதிய கற்கை நெறிகள்
**New courses 2003/2004**
- 3.1 சிறுதொழில் முகாமைத்துவம் Small Business Management
- 3.2 தகவல் தொழில்நுட்பம் Information Technology
- 3.3 மனிதவள முகாமைத்துவம் Human Resource Management
- 3.4 சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் Marketing Management
- 3.5 சோதிடக்கலை Astrology
- 3.6 சூழல் முகாமைத்துவம் Environmental Management
- 3.7 பொதுத்துறைக் கணக்கீடு Public Sector Accountancy
- 3.8 நிதி முகாமைத்துவம் Financial Management
- 3.9 கலை ரசனை Arts Appreciation
- 3.10 சினிமா ரசனை Film Appreciation
- 3.11 சிவாசாரியாரின் பங்கும் பணிகளும் Contributions and functions of Sivacharyas.
- 3.12. தொழில் சங்கவியல் Tradeunionism

புலமை சான்றோர் (Resource Person)

மேற்படி தலைப்புகளில் நடைபெறவுள்ள கற்கை நெறிகளில் புலமை சான்றோராகப் பணியாற்ற விருப்பமும் தகுதியும் உள்ள பல்கலைக் கழகத்துக்கு வெளியேயுள்ள புலமை சான்றோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் தங்கள் துறைசார் தகைமையை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலமைந்த சுயவிவரக் கோவையை (Bio Data) இணைத்து புறநிலைப்படிப்புகள் அலகுக்கு விண்ணப்பிக்கவும்.

புறநிலைப்படிப்புகள் அலகு,
யாழ்.பல்கலைக்கழகம். - இணைப்பாளர்.
10.03.2003 (சி37029)

# ராம்கோ சிமெந்து
# RAMCO CEMENT

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ராம்கோ சிமெந்து பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தள்ளது. தேவைப்படுவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

க்கிய குறிப்பு:-

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் லொறிகளுக்கு பருத்தித்துறை இறங்குதுறையில் முன்னுரிமை அளிக்கப்படும்.

சிமெந்து கொள்வனவு செய்பவர்களுள் சொந்த லொறி வைத்திருப்பவர்கள் தங்கள் லொறிகள்மூலம் பருத்தித்துறை இறங்குதுறையில் நேரடியாக ஏற்ற ஒழுங்குசெய்யப்பட்ளது.

3) பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை ஏற்ற விரும்பும் லொறி உரிமையாளர்கள் நிறுவனத்திடம் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

**ஈஸ்வரபகவான் அன் கம்பனி**

*91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே.இல. 021-222 2350*
(சி-37076)

# காசநோய் பரம்பரையாக வருவதல்ல!

**இன்று உலக காசநோய் தினமாகும். காசநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

எம்மிடையே நன்கு அறியப்பட்ட காசநோய் அல்லது கசம் அல்லது TB (Tuber Culosis) எனப்படும் நோயானது தவிர்க்கப்படவும் குணப்படுத்தக் கூடியதுமான நோயாகும். ஆனால், எம்மில் பலர் இது ஒரு பரம்பரை வியாதி என நம்புவதுடன், நோயினால் பீடிக்கப்பட்டவரை சமுதாயத்தில் இருந்து ஒதுக்கியும் வைக்கின்றனர்.

இந்நோய் பெரும்பாலானோரில் நுரையீரலையே தாக்குகின்றது. ஆனாலும், நுரையீரலை மட்டுமன்றி உடலின் எந்தப் பகுதியையும் இந்தக் கிருமிதாக்கக் கூடியது. இக் கிருமியினால் ஏற்படும் மூளைக்





காய்ச்சல் மிகவும் அபாயகரமானது. நுரையீரலில் ஏற்படும்நோய் மிகவும் பாரதூரமானது. ஏனெனில், இது வெகு விரைவில் ஏனையோருக்குப் பரவக் கூடியது. சாதாரண தடிமனைப்போன்று காற்றின் மூலமாக ஒருவரில் இருந்து இந்நோய் இன்னொருவருக்குப் பரவக் கூடியது.

எனவே, இந்நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவர் இருமும்போதும் தும்மும்போதும் மற்றும் பேசும்போதும் சிறிய எச்சில் துணிக்கைகளுடன் இக் கிருமிகள் சுற்றாடலில் உள்ள காற்றைச் சென்றடைகின்றன. இக்காற்றை இன்னொருவர் சுவாசிக்கும் போது இந்நோய்க் கிருமிகள் அவரது நுரையீரலை சென்றடைந்து நோயை ஏற்படுத்துகின்றது. காசநோயினால் பீடிக்கப்பட்ட பசுவின் பாலை நன்கு காய்ச்சாமல் அருந்துவதன் மூலமும் குடலிலும் இந்நோய் ஏற்படவாய்ப்புண்டு.

ஒருவரில் தொற்றை ஏற்படுத்துவதற்கு மிகவும் சிறிய எண்ணிக்கையிலான பற்றீரியாக்கள், அதாவது 1-3 பற்றீரியாக்கள் மட்டுமே போதுமானவை. நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சை பெறத்தவறும் சந்தர்ப்பத்தில் நோயை ஒருவருட காலப் பகுதியில் 10 தொடக்கம் 15 பேருக்கு பரப்பக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. இக்கிருமியின் தொற்றுக்கு உள்ளாகிய அனைவரும் உடனடியாக நோய்வாய்ப்படுவதில்லை. உலக சுகாதார ஸ்தாபனத்தின் கணிப்பீட்டின்படி உலகில் மூன்றிற்கு ஒருவர் என்ற விகிதத்தில் இந்நோய்க் கிருமியின் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். ஆனால், தொற்றுக்கு உள்ளாகியோரில் மிகச்சிறு தொகையினரில் அதாவது அண்ணளவாக 5 வீதத்தினருக்கு மட்டுமே இக்கிருமி நோயை ஏற்படுத்துகின்றது.

குறிப்பாக, இந்நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களையே தாக்குகிறது. நோய் எதிர்ப்புசக்தி உள்ளோரில் நுரையீரலை அடையும் இக் கிருமிகளின் பெருக்கம் அவ்விடத்திலேயே கட்டுப்படுத்தப்படுகின்றது. ஆனாலும், மிகச்சிறிய எண்ணிக்கையிலான கிருமிகள் உடலின் எதிர்ப்புச் சக்தியை ஏமாற்றிவிட்டு அங்கு உறங்கு நிலையில் (Latent phase) பல வருடங்கள் தங்கிவிடுகின்றன. ஒருவரின் நோய் எதிர்ப்பு சக்தியின் சமத்துவத்தன்மை பாதிக்கப்படும் போது உறங்கு நிலையில் உள்ள கிருமிகள் விழித்தெழுந்து பல்கிப் பெருகி நோயை ஏற்படுத்துகின்றன.

உதாரணமாக எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள், போதைவஸ்த்துக்கு அடிமையானோர், நீரிழிவு வியாதியுடையவர்கள், வயோதிபர்கள் போன்றவர்களில் அவர்களின் நோய் எதிர்ப்புச் சக்தி பாதிக்கப்படுவதனால் பலவருடங்களாக உறங்கிக் கிடக்கும் இக்கிருமிகள் விழித்தெழுந்து அவர்களில் இலகுவாக நோயை ஏற்படுத்துகின்றன.



இந்நோயினால் ஒவ்வொருவருடமும் உலகில் 30 லட்சம் மக்கள் இறக்கின்றார்கள் எனவும், 80 லட்சம் மக்களை இந்நோய் தாக்குகின்றது என்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அத்துடன், அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சனத்தொகையில் 20வீதமானவர்கள் குறிப்பாக வயோதிபர்கள் உறங்குநிலையில் உள்ள இந் நோய்க்கிருமிகளைக் காவுகின்றனர்.

இருபது வருடங்களிற்கு முன்னர் அபிவிருத்தியடைந்த நாடுகளில் காசநோய் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டதாக நம்பப்பட்டது. ஆனால், கடந்த பத்து வருடங்களாக நாடுகளில் இந்நோயினால் அவதிப்படுவோரின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணமாக இருப்பது எயிட்ஸ் நோயாகும். எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டோரை காசநோய் இலகுவில் தாக்குவதனால் எயிட்ஸ் நோயின் தாக்கமும் இவர்களில் பல மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது.

அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் காசநோயின் தாக்கம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இந்திய சனத்தொகையில் ஒரு லட்சத்தில் 178 பேர் காசநோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் அதேவேளையில், இலங்கையில் ஒரு லட்சத்தில் 42 பேரில் நோயின் தாக்கம் காணப்படுகின்றது.

அறுபது வருடங்களிற்கு முன்னர் இந்நோயைக் குணப்படுத்துவதற்கு எந்த வகையான நுண்ணுயிர்க் கொல்லிகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் 1944ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட ஒருவகை நுண்ணுயிர்க்கொல்லி காசநோயிற்கான சிகிச்சையில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. அதன் பின்னர் வேறும் பல நுண்ணுயிர்க்கொல்லிகள் கண்டுபிடிக்கப்பட்டு இன்று பாவனையில் உள்ளன. தற்போது குறிப்பாக நான்கு வகையான நுண்ணுயிர்க் கொல்லிகளை ஒரே சமயத்தில் உட்கொள்வதன் மூலம் இந்நோயைக் குணப்படுத்த முடியும். ஏனைய பற்றீரிய நோய்களைப் போலன்றி இந் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் மிக நீண்டகாலத்திற்கு அதாவது ஆறு மாத காலத்திற்கு இம்மருந்துகளை உட்கொள்ள வேண்டியுள்ளது. இம் மருந்துகளை சரியான முறையில் உட்கொள்ளாது விடுவதும், இடைநடுவில் நிறுத்திக்கொள்வதும் இந் நோய் மீண்டும் ஏற்படுவதற்கு காரணமாக அமைவதுடன் நோயை ஏற்படுத்தும் கிருமிகளை மேற்கூறப்பட்ட நுண்ணுயிர்க் கொல்லிகளினால் அழிக்கமுடியாத நிலையும் ஏற்படுகின்றது.

எனவே, ஒழுங்கு முறையாக நோயாளர்கள் சிகிச்சையை பின்பற்றுகின்றார்களா? என்பதை உறுதிப்படுத்துவதற்காக நேரடி மேற்பார்வையின் கீழ் குறுகிய கால சிகிச்சை முறையொன்றை [Directhy Observed Treatment Short course (DOTS)] உலக சுகாதார ஸ்தாபனம் மேற்கொண்டு வருகின்றது. இச்சிகிச்சை முறையின் கீழ் சரியில் காசநோய் கிருமிகளை கொண்டுள்ள அனைவரும் குறுகிய காலம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவர்.

வைத்தியசாலையை விட்டு வெளியேறிய பின்னர் சமுதாய சுகாதார உத்தியோகத்தர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் சிகிச்சை தொடரப்படுகின்றது. இந்த உத்தியோகத்தர்கள் நேரடியாக நோயாளர்களின் வசிப்பிடங்களுக்கு வருகைதந்து நேரம் தவறாது சிகிச்சையை பூரணமாக நோயாளிகள் பின்பற்றுகின்றனரா? என்பதை உறுதி செய்து பதிவுகளை மேற்கொள்கின்றனர். இவ்வாறான சிகிச்சை முறையில் 95வீதமான நோயாளர்கள் பூரண குணமடைகின்றனர். அத்துடன் நுண்ணுயிர்க்கொல்லிகளால் அழிக்கப்பட முடியாத கிருமிகள் உருவாகுவதும் தடுக்கப்படுகின்றது.

காசநோய் சமுதாயத்தில் பரவாமல் தடுப்பதற்கு மிக முக்கியமானது காலம் தவறாத சிகிச்சை. ஒருவருக்கு காசநோயிற்கான அறிகுறிகளான இலகுவில் களைத்துவிட்டதான உணர்வு, குறைந்த காலப்பகுதியில் உடல் நிறையில் கணிசமான இழப்பு, மூன்று கிழமைக்கு மேலான இருமல், காய்ச்சல், இரத்தம் கலந்த சளி என்பன இருக்குமிடத்து உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அடுத்ததாக ஊட்டச்சத்துமிக்க உணவை உண்பதன் மூலம் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை வலிமைப்படுத்திக் கொள்ள முடியும்.

**கலாநிதி (திருமதி) ம.ஜெயநாதன்**
மருத்துவபீடம், யாழ்.பல்கலை.

உயிர்ச்சத்து D காசநோயிற்கு எதிரான நோய் எதிர்ப்புச் சக்தியை தரவல்லது என பல ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. உயிர்ச்சத்து D அதிகளவில் மீன், மீன் எண்ணை போன்றவற்றில் காணப்படுகின்றது. அத்துடன் எமது தோலும் நேரடி சூரிய ஒளியைப் பெறும் போது இந்த உயிர்ச்சத்தை உற்பத்தி செய்கின்றது.

காசநோயிற்கு எதிரான தடுப்பூசியான BCGஐப் பெற்றுக்கொள்வதன் மூலமும் இந்நோயை தவிர்த்துக் கொள்ளமுடியும். இலங்கையில் BCG தடுப்பூசி எல்லாக் குழந்தைப்பேற்று மருத்துவமனைகளிலும் குழந்தை பிறந்து 24 மணித்தியாலத்தினுள் வழங்கப்படுகின்றது. ஆனாலும், BCG தடுப்பூசியின் செயற்றிறமை சம்பந்தமாக பல மாறுபட்ட கருத்துகளும் நிலவுகின்றன.

ஆனால், இது எப்படி இருப்பினும் BCG தடுப்பூசி காசநோய்க் கிருமினால் ஏற்படும் அபாயகரமான மூளைக்காய்ச்சலுக்கு எதிராக நூறு வீத பாதுகாப்பை அளிக்கின்றது. தற்சமயம், காசநோயிற்கு எதிராக செயற்றிறமை கூடிய தடுப்பு மருந்துகளை கண்டுபிடிப்பதில் உலக விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## கொடிகாமம் கூ.சங்கத்தில் முத்திரை விற்பனை

வரணி,மார்ச்24

கொடிகாமம் தென்.கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது நகரக்கிளையில் முத்திரை விற்பனைப் பிரிவு ஒன்றை அண்மையில் ஆரம்பித்துள்ளது.

தபாலகங்களில் விற்கப்படும் அதே விலைக்கே இங்கே முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-170)

## குருநகர் வீதியை செப்பனிடும் பணி இன்று ஆரம்பம்

குருநகர்,மார்ச்24


சேதமடைந்துள்ள குருநகர் கடற்கரை வீதியை செப்பனிடும் வேலைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் செயலாளர் ம.குயின்ரன் தெரிவித்தார்.

சேதமடைந்துள்ள இவ்வீதியின் செப்பனிடுவதற்காக கற்கள் வீதியில் இரு மருங்கிலும் வீதி அதிகார சபையால் குவிக்கப்பட்டு நான்கு மாதங்கள் கடந்துவிட்டதாகவும் -

ஆயினும் இதுவரை இவ்வீதி செப்பனிடப்படவில்லை என்றும் -

இது தொடர்பாக வீதி அதிகார சபையின் பிரதேச பொறியியலாளர் எஸ்.ஸ்ரீநிவாசனை நேரில் சந்தித்து விரைவாக வீதியை செப்பனிட்டுத் தருமாறு தமது அமைப்பின் கோரிக்கை விடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-51)

இப்போது மீண்டும் யாழ்ப்பாணத்தில்!
ASIABIKE DELUXE
ஒறிஜினல் ஏசியா சைக்கிள்
Asia Bike



15 வருட கால இடைவெளிக்குப் பின்னர் இப்போது மீண்டும்
யாழ் மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
ஜப்பானிய தொழில் நுட்பத்தில்
உருவான புதுமெருகுடன் கூடிய
DELUXE
ஆண்கள் ~ பெண்கள் ~ சிறுவர்களுக்கான
KING OF CYCLES
ஏசியா சைக்கிள்கள்
The ALL-STEEL Bicycle
விற்பனையாகின்றன!
ஈஸ்வரன் ரேடர்ஸ்
இல. 69 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222-2813
148, கண்டி வீதி, வவுனியா. T.P: 024.22497
132, டாம் வீதி, கொழும்பு -12 T.P: 074 - 714312
(C/37073)
உங்கள் பணம் ஒரு தரமான பொருளுக்குச் செலவாகி உதவட்டும்

# அசம்பாவிதம் நடப்பதைத் தடுக்கவே புலிகள் வன்னிக்கு அழைக்கப்பட்டனர்!

## அஞ்சலி நிகழ்வில் அரசியற்றுறைப் பிரமுகர் விளக்கம்

வலி.வடக்கு,மார்ச்24

உணர்ச்சி மேலீட்டால் இங்குள்ள புலிப் போராளிகள் எதனையும் செய்து விடக்கூடாது என்பதற்காகவே அவர்களை அவசரமாக வன்னிக்கு அழைத்தோம்.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்றுறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த அன்பழகன் குறிப்பிட்டார்.

கடந்த மாதம் சர்வதேச கடற்பரப்பில் வர்த்தகக் கப்பலுடன் அழிக்கப்பட்ட பதினொரு புலி வீரர்களின் வீரவணக்கக் கூட்டம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் யாழ்.மாவட்ட கல்விப் பொறுப்பாளர் வை.தமிழன்பன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அன்பரசன் மேலும் தெரிவித்ததாவது:-

எமது தேசமும் மக்களும் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காக எமது இயக்கத்தைச் சேர்ந்த 17 ஆயிரத்திற்கு மேற்பட்ட புலிப்போராளிகள் மரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளனர். இவ்வீர வேங்கைகளின் மரணங்களின் பின்னால் பல்வேறு காவியங்களும் காணப்படுகின்றன. புரிந்துணர்வு ஒப்பந்தத்தையிட்டு தென்பகுதி மக்கள் கொண்டாடலாம். ஆனால், எம்மால் இதனையிட்டு எதனையும் கொண்டாட முடியாது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் கூட நாம் இழப்புகளையும துயரங்களையும் தொடர்ந்தும் சந்தித்துக்கொண்டு இருக்கின்றோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர், மக்கள் பல்வேறு எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலமையிலேயே எதிரி எமது வீரர்களை படுகொலை செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளான்.

நெடுந்தீவு கடற்பரப்பிலும், சர்வதேசக் கடற்பரப்பிலும் போராளிகள் கொல்லப்பட்டனர். இத்தகைய நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இதனால், கொதிப்பும் ஆத்திரமும் கொண்ட புலிப் போராளிகள் உணர்ச்சி மேலீட்டால் எதனையும் செய்து விடக்கூடாது என்பதற்காகவே இங்கிருந்து அவர்கள் வன்னிக்கு அழைக்கப்பட்டனர். எமக்குரிய ஆயுதங்களை கப்பலில் கொண்டு வரவேண்டும் என்ற அவசியம் எமக்கு இல்லை. ஏனென்றால் எமக்குரிய ஆயுதங்கள் அரச படைகளின் முகாம்களிலேயே இருக்கின்றன.

இம்மண்ணின் நிம்மதிக்கும் விடிவுக்காகவும் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. இந்த வகையில் பண்டா - செல்வா, டட்லி - செல்வா, இந்திய - இலங்கை, பிரேமதாஸ - புலிகள், சந்திரிகா - புலிகள், ரணில் - புலிகள் என்று பல ஒப்பந்தங்கள ஏற்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தங்களின மூலம் நாம் எவ்வளவு தூரம் விட்டுக்கொடுத்தோம் என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் குமரப்பா, புலேந்திரன் உட்பட பலரையும் நாம் இழந்துள்ளோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் நாம் அரச படைகளை திருப்பித் தாக்க முடியாத நிலைமையில் இருக்கின்றோம். தலைவருடன் ரணில் ஒப்பந்தம் செய்து கொண்டமையால் பொறுமையைக் கடைப்பிடித்து ஒப்பந்தத்தின் வெற்றிக்காக விட்டுக் கொடுக்கின்றோம்.

உலக மக்கள் ஒன்றை நன்கு புரிந்து கொண்டுள்ளார்கள். புலிகள் தம் மக்களின் நல்வாழ்விற்காக தமது பல்வேறு வகையான இழப்புக்களையும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதை உலக சமூகத்திற்கும் உணர்த்தியுள்ளோம்.

- என்றார் அவர். (ஒ-86)

திருமலையில் தனியார் நிறுவன கப்பல்களிலிருந்து

# சரக்குகளைக் கையாளும் பணிகள் துறைமுக ஊழியர்களிடமிருந்து பறிப்பு!

திருகோணமலை,மார்ச்24

திருகோணமலையில் இருக்கும் "மிட்சுயி" லங்கா லிமிட்டெட் சிமெந்து தொழிற்சாலைக்கு மூலப்பொருள்கள் ஏற்றிவரும் கப்பல்களில் சரக்குகளைக் கையாளும் பணியை, துறைமுகங்கள் அதிகார சபையின் ஊழியர்களே இத்தனை காலமும் செய்துவந்தனர். ஆயினும் கடந்த 20 ஆம் திகதி முதல் அது தனியாரிடம் அதாவது மிட்சுயி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை என்றே தொழிற்சங்கங்களின் முக்கிய தலைவர்கள் இப்போதும் சொல்கின்றனர். தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுவதும் கட்டுக்கதை என்கிறார்கள் அவர்கள்.

விரைவில் சிமெந்துக் கம்பனிக்கு கப்பல் ஒன்று வரவிருக்கின்றது. அங்கு வேலைக்கு துறைமுக ஊழியர்கள் தேவையில்லை என்று கூறப்படும். அதன் பின்னர்தான் தொழிற்சங்கங்களின் சாயம் வெளுக்கப்போகிறது.

திருமலைத்துறைமுகத்தில் இப்போது எஞ்சியிருப்பது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அஷ்ரப் இறங்குதுறை மட்டுமே. இதுவும் வெளிநாட்டுக் கம்பனிக்கு வழங்கப்படவிருப்பதாகவும் இலங்கையில் மிட்சுயி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும் தகவல்கள கிளம்பியுள்ளன.

இப்போது இந்தோனேசியாவில் இருந்து வந்த ஒரு கப்பல் அஷ்ரப் இறங்குதுறையில் நிலக்கரியை இறக்கிக்கொண்டிருக்கிறது. 15 ஆயிரம் தொன் நிலக்கரி, உப்பு வெளியில் சேமித்து வைக்கப்பட்டு புத்தளம் சிமெந்துத் தொழிற்சாலைக்கு அனுப்பப்படவுள்ளது.

பிறிமா மற்றும் மிட்சுயி நிறுவன சரக்குக் கப்பல்களில் சரக்கு கையாளும் பணி, துறைமுகங்கள் அதிகார சபை ஊழியர்களிடமிருந்து பறிபோக விருப்பது முன்னரே தெரிந்ததே. (ஐ)

## கண்ணீர் அஞ்சலி

திரு.கந்தையா சிவலிங்கம்
(கிராம உத்தியோகத்தர், காரைநகர் மத்தி, பொருளாளர், ஊர்காவற்றுறை, உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கடன் உதவுசிக்கன கூட்டுறவுச் சங்கம்)
*அவர்களின் அன்புத் தாயார்*

**கந்தையா பொன்னு** அவர்களின்

மறைவையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை.* (சி-37085)
உதவி அரசாங்க அதிபர் பணிமனை நலன்புரிச் சங்கமும், சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும்.

## துயர் பகிர்கின்றோம்

யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் சுமார் 30 வருடங்கள் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும் பணிபுரிந்து இளைப்பாறிய ஆசிரிய திலகம், சமூகதுரை

**கந்தப்பு இராசதுரை** அவர்கள்

15.03.2003 இல் லண்டனில் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த துயரினைப பகிர்ந்துகொள்ளுகின்றோம்.

*யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.* (15912) - கல்லூரிச் சமூகம்.

## கஜேந்தினி பந்தல் சேவை

இன்று (24.03.2003) திறப்பு விழாவுடன் ஆரம்பிக்கும் எம் நிறுவனத்திடம் உங்கள் கொண்டாட்டங்களுக்கான சொக்கட்டான் பந்தல், மணவறை, பிளாஸ்ரிக் பாய், கதிரை, ஒலி, ஒளி அமைப்பு, வீடியோ போட்டோ, மேக்கப்செற், சமையல் பாத்திரங்கள் என்பன வாடகைக்கு விடப்படும்.

உரிமையாளர்:
**அ.சிவசுப்பிரமணியம்**
கோப்பாய் மத்தி *(சந்தி)* (15913)

## 25 ஆம் வருட நினைவாஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 - 01 - 1910 | 31 - 03 - 1978 |



**அமரர் தம்பையா சிவகுரு**

நீதி நியாயமுமே நிறைவாழ்வு என்றெண்ணி
ஆதி மிடுக்குடனே ஆனந்த வாழ்வு வாழ்ந்து
இல்லறமே நல்லறமென இயன்றவரை பார்த்திருந்து
இவ்வுலகை விட்டு ஏகியே இருபத்தைந்து வருடமாச்சு
நோயுற்றுழலாமல் நொந்து மனம் வாடாமல்
பாயில் கிடவாமல் ... சேர்ந்தீர்களே ~ ஐயாவே!
உற்றாரை இழந்தும் ஏற்ற மனையாளை நம்பி
கஷ்டத்திலும் சந்தோசமாக வாழ்ந்தீர்கள்
துன்பத்திலும் துவழாமல் சந்தோசமாக வாழ்ந்தீர்கள் ~ அதை
நினைத்தே இன்றும் நாம் வாழ்கின்றோம் ~ ஐயாவே!
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

சி.சிவகுமார்.
*நாச்சிமார் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.* (சி-37081)
தங்கள் நினைவுடன் வாழும்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


**ராஜா** யாழ்ப்பாணம்
இன்றுமுதல்
விஜய், ரீமாசென், வடிவேல்
**பகவதி**
10.30, 2.30, 6.30 மட்டும்
**RUSH HOUR 2**
26 வரை - இரவு 9.30 இற்கு மட்டும்
(C/37083)

**நிறஞ்சனாஸ்** சங்கானை
சத்தியராஜ், சுவலட்சுமி நடித்த
**ஆண்டான் அடிமை**
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45மணிக்கு
**HOLLOW MAN**
(C-37067)

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜயகாந்த், சௌந்தர்யா, கவுண்டமணி, செந்தில் *நடித்த*
**சொக்கத்தங்கம்** *(ரீலஸ்)*
(இனிய பாடல்கள் நிறைந்த திரைப்படம்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00மணி (பு.நேரம்)
(15881)


## மரண அறிவித்தல்

### முருகன் கனகையா

நாவற்குழி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் கனகையா நேற்று (23.03.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் தம்பதியினரின் மகனும் அழகம்மாவின் அன்புக் கணவரும் வசந்தாதேவி, வசந்தகுமாரி, விஜயகுமாரி, சாந்தகுமாரி, உதயகுமாரி, இந்திரகுமாரி, ஆனந்தமுருகன், அருளானந்தராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சற்குணம், சந்திரசேகரம், இந்திரராஜா, தங்கராசா, க்ளோடியா, பிலிப்ஸ், ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மருமகனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2003) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிணமுருங்கை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாவற்குழி கிழக்கு, கைதடி.* (C/37084) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

### வில்வட்சில்வா சின்னம்மா (சோதியம்மா)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வில்வட்சில்வா சின்னம்மா அவர்கள் 21.03.2003 வெள்ளிக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் செல்லையா தையல்நாயகியின் அன்பு மகளும் காலஞ்சென்ற வில்வட்சில்வா (மின் இணைப்பகம்) அவர்களின் அன்பு மனைவியும் விஜயராணி (பபா), விஜயகுமாரி, விக்கினேஸ்வரி (பவானி - ஜேர்மனி), விஜயேஸ்வரி (தேவி - ஹொலண்ட்), விமலேஸ்வரி (காமினி - ஹொலண்ட்), விமலரஜினி (கனடா) , விஜயகாந்தன் (லண்டன்), விமலகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்லம் (செரக் ரான்ஸ்போட்), ராஜன், நாகராஜா, உதயன், மாணிக்ககுமார், ஹாசன், ஹேனா, உஷா ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதா (செரக் ரான்ஸ்போட்), கண்ணா, கிருஷ்ணா, யாழ்தன், டயனியா, லக்ஷி, யாழினி, லூடியா, கவி, வாகினி ஆகியோரின் பேர்த்தியும் குணா, சியாமளா, யோகன் (புவிதா கிறீம் ஹவுஸ்) ஆகியோரின் சிறிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2003) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*79, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.* *021 222 2672* (15915) தகவல்: குடும்பத்தினர்.

### கந்தசாமி சுஜிந்தன்

புத்தூர் கிழக்கு, குருநகர் கோவிலடியைச் சேர்ந்த கந்தசாமி சுஜிந்தன் 22.03.2003 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கந்தசாமி (வடமராட்சி தெற்கு - மேற்கு, பிரதேச சபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி, நெல்லியடி) - தவமணி தம்பதிகளின் செல்வப் புதல்வனும் சுதர்சன் (லண்டன்), சுஜிதா, சுரதீபன், சுஜீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தம்பியையா - ராசம்மா தம்பதிகளின் அன்புப் பேரனும் நகுலேஸ்வரன் - மாலா (ஜேர்மனி), பொன்னம்மா, சின்னம்மா ஆகியோரின் மருமகனும் வீரகத்தி, தம்பிராசா ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அரவது இல்லத்தில் இன்று (24.03.2003) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அந்தரானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3ஆம் வட்டாரம், புத்தூர் கிழக்கு, புத்தூர்.* (15910)
தகவல்: M.கந்தசாமி (தந்தை) (வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபை உபஅலுவலகப் பொறுப்பதிகாரி, நெல்லியடி).


உ
ஸ்ரீராமஜெயம்

## மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் சித்திரபானு வருஷம் பங்குனித் திங்கள் 10 ஆம் நாள் இன்று (24.03.2003) திங்கட்கிழமை நண்பகல் 12.16 மணிமுதல் 1.46 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

**கிருஷ்ணா பிறின்ரேர்ஸ்**

என்னும் அச்சுப்பதிப்பு நிலையத்தை "உதயன்", "சுடர்ஒளி" நிர்வாக இயக்குநர்

**திரு. ஈ.சரவணபவன் அவர்கள்**

திறந்து வைக்க எம்பெருமான் பெருங்கருணையினால் திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

*சுப்பிரமணியம் வீதி, (அந்தோனியார் கோவிலுக்கு அருகில்) சுன்னாகம்.* (C/37077)

தங்கள் நல்வரவை நாடும்:
க.சச்சிதானந்தம்
(முன்னாள் உதயன், சுடர்ஒளி பணியாளர்)

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்



## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3510140 இருந்து
3527303 வரை
சீட்டிழுப்பு இல. 1386
திகதி 22.03.2003



## வெற்றி எண்கள்

**09 33 50 51 52**

போனஸ் எண் **27**

ஜக்பொட் பரிசு
**ரூபா.1,500,000/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 107 | 10,000/- | 1,070,000/- |
| 3 | 5,498 | 500/- | 2,749,000/- |
| 2 | 90,735 | 20/- | 1,814,700/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 09ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 110,558 | 10/- | 1,105,580/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,939,280/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா.2,356,500/-**

தொடர் இல. 2531393க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 மார்ச் 26ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3512228-9-45
3514858-2-64
3511769-6-02
3520901-2-95
3513048-8-37

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 459 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
|---|---|---|
| திகதி | 21.03.2003 | செல்லுபடியாகும் தொடர் இல. 5811887-5826042 |

வெற்றி இலக்கங்கள் **11 26 41 45**

லக்கினம்
விருச்சிகம்



ஜக்பொட் பரிசு
ரூபா.5,140,500/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **5,480,350/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 304,295 | 10 | 3,042,950 |
| 2 இலக்கங்கள் | 27,989 | 20 | 559,780 |
| 1 இல + லக்கினம் | 27,824 | 30 | 834,720 |
| 2 இல + லக்கினம் | 2,520 | 100 | 252,000 |
| 3 இலக்கங்கள் | 729 | 500 | 364,500 |
| 3 இல + லக்கினம் | 80 | 5,000 | 400,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 5,140,500 | - |
| மொத்தம் | 363,441 | - | 5,853,950 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,853,950/-

தொடர் இல. 4833651க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 மார்ச் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5822102-8-89
5822264-6-52
5813909-5-07
5824067-4-25
5822042-1-92

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



# சுடர் ஒளி 30.03.2003 இதழில்

விலை 14 /=




- பேச்சுவார்த்தை தாமதமானால் உலக நாடுகளின் மனம் மாறலாம்.
- உலகநாடுகளின் எதிர்ப்பையும் மீறி ஈராக்கை அழிக்க புஷ் திடசங்கற்பம்.
- சுயலாபத்துக்காக அப்பாவிகளைக் கொல்வது பயங்கரவாதமில்லையா? - (தேரடி)
- வளைகுடாவில் யுத்த மேகம் யாழ்.குடாவில் பதுக்கல் அமோகம்.
- பொறுமை காக்கும் புலிகளை பொங்கி எழ வைக்க முயற்சி.
- புலிகளின் கப்பலை அழிக்க பின்னணியில் இயங்கிய கரம் எது?

மற்றும் மசாலா மிக்ஸ், பித்தன் பதில்கள், இணையத்தளங்களிலிருந்து, சினிமா, விளையாட்டு, சிறுவர் உட்பட பல்வேறு சுவையான அம்சங்கள்.

(CJ3708)



## திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
### இராஜகோபுர மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**சித்திரபானு வருடம் பங்குனி 13 ஆம் நாள் (27.03.2003) வியாழக்கிழமை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல்.**

*25.03.2003 செவ்வாய்க்கிழமை*
*காலை 7.00 – மாலை 7.00 வரை.*
*26.03.2003 புதன்கிழமை*
*காலை 7.00 – நண்பகல் 12.00 வரை.*

**கும்பாபிஷேகக் கிரியைகள் யாவும் அம்பாளுடன் இரண்டறக் கலந்த சைவாகம கிரியா சிரோமணி சிவஸ்ரீ சிவலோகநாதக் குருக்களின அருளாசியுடன் நடைபெறும்.**

- தேவஸ்தானம்.

விளம்பர அனுசரணை :
**கி.சிவகிருபன்** (15906)



## பொலிகண்டி அருள்மிகு கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மண்டலாபிஷேகப் பூர்த்திநாள் 26.03.2003 புதன்கிழமை

**அன்று 48 ஆம் நாள் மண்டலாபிஷேகம் பகல் 10.00 மணிக்கு மூலவருக்கு 1008 சங்காபிஷேகமும், ஆறுமுக சாமிக்கு 108 சங்காபிஷேகமும் இடம்பெறும். இரவு 8.00 மணி அளவில் மங்கள இசையினை**

| | |
|---|---|
| N.K.பத்மநாதன் | அளவெட்டி |
| L.S.ஜெகநாதன் | உடுப்பிட்டி |
| N.கோவிந்தராஜன் | தொண்டமனாறு |
| V.சீவரட்ணம் | நெல்லியடி |

**குழுவினர் வழங்க எம்பெருமான் மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வீதியுலா வந்து அனைவருக்கும் அருள் பாலிப்பார்.**

★ *பகல் 1மணியளவில் அன்னதானம் இடம்பெறும்.*
★ *இரவு திருக்கல்யாண நிகழ்வும் இடம்பெறும்.*

**அடியார்கள் அனைவரும் முருகப்பெருமானைத் தரிசித்து முருகப்பெருமான் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்போம்.**

**ஆதீனகர்த்தா - உபயகாரர்**
**திக்கம் செல்லையா குடும்பத்தினர்.**

*அனுசரணை:*
**யோ.ரமேஷ்**
(கனடா - ஆதீனகர்த்தா) (15901)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09 - 03 - 1915 | 22 - 02 - 2003 |



**வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரும்**

**அமரர்**
## சபாபதிப்பிள்ளை தருமபாலு

*(இளைப்பாறிய வேலணை, பல நோக்கு கூட்டுறவுச்சங்க கிளை முகாமையாளர்)*

அன்போடும் பண்போடும் வாழ்ந்தீர்களே
ஆதரவாய் அரவணைத்து அன்புமொழி பேசினீர்களே
நீங்கள் மறைந்தாலும் உங்களது அன்பு முகம்
எம்முன்னே என்றென்றும் நிழலாக நிற்குதே!
ஆண்டுகள் பல கடந்தாலும் ஆதங்கம் நெஞ்சில் கனக்கும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இன்று (24.03.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*இல,162,நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(15902)
பிரிவால் துயருறும்:
மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

## விஞ்ஞானச் சங்க வினாடிவினா போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்.விஞ்ஞானச் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் அறிவியல் வினாடி வினாப் போட்டியின் கால் இறுதி, இறுதிநிலைப் போட்டிகள் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற அரையிறுதிச் சுற்றில் வெற்றி பெற்ற கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலயம், யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களே இப்போட்டிகளில் பங்கு பற்றவுள்ளார்கள்.

இதில் வெற்றிபெறுபவர்களுக்கும், ஏற்கனவே விஞ்ஞான சங்கத்தால் நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, கண்காட்சி முதலான போட்டிகளில் பரிசுபெறுபவர்களுக்குமான சான்றிதழ்களும் பரிசில்களும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ள நிகழ்வில் வழங்கப் படும் என விஞ்ஞானச் சங்க உதவிச் செயலர் பேராசிரியர் நா.ஞானக்குமரன் தெரிவித்துள்ளார் (ஒ-12)

## சதுரங்க சம்பியன்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்24

வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் 19வயதுப் பிரிவின் ஆண்,பெண் அணிகளுக்கான போட்டிகளில் கரணவாய் மகாவித்தியாலய அணிகள் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப் பட்டன. (ஒ-5)

## தவக்கால யாத்திரை

குருநகர்,மார்ச்24

குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்கைச் சேர்ந்த மக்கள்,' தவக் காலத்தை முன்னிட்டு எதிர்வரும் சனிக்கிழமை சாட்டிக்கு பாத யாத்திரை செல்ல உள்ளார்கள்.

இவர்கள் இப்பாதயாத்திரையின் போது சிலுவையைத் தமது தோள்களில் சுமந்து செல்வார்கள். அன்று காலை 6 மணிக்கு யாழ்.பிரதான வீதியில் இருந்து இப்பாதயாத்திரை ஆரம்பமாகும் எனவும் -

சாட்டிக்குப் பாதயாத்திரையாகச் செல்ல உள்ளவர்கள் மீண்டும் குருநகருக்குத் திரும்பிவருவதற்காக பஸ் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் - குருநகர் புனிதயாகப்பர் ஆலய பங்குத் தந்தை வணபிதா அ.பி.ஜெயசேகரம் அடிகள் அறிவித்துள்ளார்.

(ஒ-51)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

உடுவில் ஸ்ரீ கந்தசுவாமி ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை' காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை நண்பகல் 12 மணி தொடக்கம் நாளைமறுதினம் நண்பகல் 12 மணிவரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

(ஒ-4)

## சீருடைத்துணி விநியோகம்

கோப்பாய்,மார்ச்24

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள நீர்வேலி ப.நோ.கூ.சங்கம் மாணவர்களுக்கான இலவச சீருடைத்துணி விநியோகத்தை கடந்த சனிக்கிழமைமுதல் மேற்கொண்டு வருகிறது.

இன்று திங்கட்கிழமை உரும்பிராய் ஜே/263, ஜே/264 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும், நாளை செவ்வாய்க்கிழமை ஜே/265 , ஜே/266, ஜே/267 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் உரும்பிராய் உப மொத்த நிலையத்திலும் -

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜே/257, ஜே/258, ஜே/259 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கும், மறுநாள் சனிக்கிழமை ஜே/260, ஜே/261, ஜே/262 பிரிவுகளுக்கும் கோப்பாய் உப மொத்த நிலையத்திலும் - சீருடைத்துணிகள் வழங்கப்படவுள்ளதாக கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(ஒ-72)

## தாதியர் தேவை

- முன்னனுபவம் உள்ளவர்கள் நேரில் தொடர்புகொள்ளவும்.
- சிங்களத்தில் / ஆங்கிலத்தில் சரளமாக உரையாடும் ஆற்றல் உடையவர்களுக்கும், கணனியைக் கையாள்வதில் அனுபவம் உடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**JAFFNA MEDICAL CENTRE**
228, MAIN STREET, JAFFNA.
*(Phillips Nursing Home).*
(15908)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



உரும்பிராய் தெற்கு
*J/265* கிராம உத்தியோகத்தர்
**திரு. ஆழ்வாப்பிள்ளை சூரியகுமாரன்**
அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு, அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம். அவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று சிறப்படைய இறைவன் அருள்புரிவாராக.

(15907)
**உரும்பிராய் தெற்கு**
**வாழ்மக்கள்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விஜயரட்ணம் பரிமளம் (பவளம்)

கரந்தன், நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயரட்ணம் பரிமளம் (பவளம்) 22.03.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னையா விஜயரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பையா மற்றும் சின்னம்மா ஆகியோரின் அன்பு மகளும் தனலட்சுமி, பாலசுப்பிரமணியம், ஞானசுந்தரம் (உரிமையாளர், லம்போதரன் ரேடரீஸ்), ஞானசேகரம், செல்வராசா (ஹொலண்ட்), விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அம்பிகா (ஆசிரியை, அல்கிராய் முஸ்லிம் மகா வித்தியாலயம்), அருந்ததி (ஹொலண்ட்), அஜந்தா (கிராமிய வங்கி, கோப்பாய்), கற்பகரூபன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுதானந்தன், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுஜீபன், சுலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2003) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரந்தன்,*
*நீர்வேலி.*
(15904)
தகவல்:
குடும்பத்தினர்.

### சவரிமுத்து நீக்கிலாப்பிள்ளை

*(முன்னாள் களஞ்சியக் காப்பாளர், இலங்கை புகையிரதத் திணைக்களம்)*

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து நீக்கிலாப்பிள்ளை 19.03.2003 புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பஸ்தியாம்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் மரியமுத்துவின் அன்புக் கணவரும் ரூபகுமார் (கனடா), அமலகுமார் (கனடா), மரியவதனி (சுவிஸ்), பிரதீப்குமார் (கொழும்பு), ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறீதரன், யூலியற், கறோரின் ஆகியோரின் மாமனாரும் பாக்கியம், மரியம்மா, காலஞ்சென்ற சாமிநாதர் ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை, அன்னம்மா, செல்வராணி, செல்வரத்தினம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் கிருஷாந், சபினா, லக்ஷிகா, லக்ஷிசன், நிக்சிசன், நோயல், நோறா- ஆகியோரின் பேரனும் யோசேவ், அமிர்தநாயகம், போல், ரீட்டா ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாளை(25.03.2003)செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணியளவில் கரவெட்டி கீரிப்பல்லி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

*'நவரத்தினவாசா'*
*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.*
(சி-37075)
தகவல்:
பிரதீப்குமார் (மகன்).

### திருமதி செல்லத்துரை பூமணி

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், கனகராயன்குளத்தை வசிப்பிடமாகவும் 541, பருத்தித்துறை வீதி, நல்லூரை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை பூமணி அவர்கள் 22.3.2003 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் செல்லாச்சியின் அன்பு மகளும் விநாயகர் - சின்னாச்சியின் மருமகளும் வசந்தா (பிரான்ஸ்), சாந்தா (கனகராயன்குளம்), விஜயா (நல்லூர்), சிவராஜா (சுவிஸ்), ராகினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குமாரசாமி (பிரான்ஸ்), சபாரத்தினம் (கனகராயன்குளம்), சிவகுமார் (தச்சன் தோப்பு), சுதாகரன் (சுவிஸ்), சாந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சுபத்திரை மற்றும் இரத்தினம், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் தணிகாசலம் (கிளி), வடிவேலு (பூராசா), இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் ஆறுமுகம் (கொழும்பு), திருநாவுக்கரசு (நல்லூர்), செல்வராணி, மனோன்மணி, பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் தனுசா, உசன், சுபிட்சன் (பிரான்ஸ்), தர்சிகா, தர்சிகன், லக்சணா, கவிமன், கபினா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2003) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*
(15905)
தகவல்:
வி.செல்லத்துரை
(கணவர்).

# தேர்தல் முறையில் மாற்றம் செய்ய அரசும் எதிர்க்கட்சியும் இணக்கம்

கொழும்பு,மார்ச்24

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறையைத் திருத்தியமைப்பதற்கு அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணக்கத்துக்கு வந்திருக்கின்றன. இதற்கென சிபாரிசுகளைத் தெரிவிப்பதற்கு நாடாளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை நியமிக்கவும் இரு தரப்புக்களும் தீர்மானித்திருக்கின்றன.

நாடாளுமன்றக் கட்டடத்தில் அண்மையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் விசேட கூட்டத்தில் இந்த இணக்கம் காணப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

விருப்பு வாக்குகள் முறையை மாற்றியமைத்தல், மாவட்ட தெரிவு முறைக்குப் பதிலாக தொகுதி முறையை ஏற்படுத்துதல், வெற்றிடங்கள் ஏற்படும் பட்சத்தில் இடைத்தேர்தல் நடத்துதல் ஆகிய விடயங்கள் குறித்து தெரிவுக்குழு ஆராயும் என அறியப்படுகிறது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் சில வற்றை நீக்கும் சாத்தியம் குறித்தும் இக்குழு ஆராயவிருக்கிறது.

இத்தெரிவுக்குழுவை அடுத்த சில வாரங்களில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறியப்படுகிறது. குழு அமைக்கப்பட்டதும் ஆறுமாதங்களில் அறிக்கை பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ)

## குருணாகலையில் கடையொன்று எரிந்தது!

கண்டி,மார்ச்24

குருணாகலை, கட்டுகஸ்தோட்டை வீதியில் நேற்று திடீரென கடையொன்று தீப்பற்றி எரிந்தது. இதனால், பல லட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமடைந்தன.

நேற்றுக் காலை 10 மணியளவில் இக்கடை திடீரெனத் தீப்பற்றி எரிந்தது. பொலீஸாரும் தீ அணைப்பு படையினரும் விரைந்து செயற்பட்டதனால் தீ கட்டுப்படுத்தப்பட்டது. இருந்த போதும் அருகில் இருந்த கடைகளுக்கு சிறிய சேதங்கள் ஏற்பட்டன.

கடையில் பட்டாசுகள் அதிகமாக இருந்தன எனவும் கடையில் சிகரட் பிடித்துக்கொண்டிருந்த ஒருவர் சிகரட்டை எறிந்ததனாலேயே தீப்பற்றியதெனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# பொன்டிங் அபாரம்...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பொன்டிங் தனது அரைச் சதத்தை 74 பந்துகளில் பூர்த்தி செய்தார். ஆனால், அதன் பின்னர் வீறு கொண்டு அவர் விளாசியதில் பறந்தவைகள் அனேகம் சிக்ஸர்கள்.

40ஆவது ஓவரில் மேலதிகமாக




எந்த விக்கெட் இழப்பும் இன்றி 250 ஓட்டங்களைக் கடந்தது ஆஸ்திரேலியா. 50ஓவர்களிலேயே இது ஒரு நல்ல இலக்கு. ஆனால், ஆஸ்திரேலியர்கள் 40 ஓவர்களில் அதனைத் தாண்டினார்கள். அடுத்த பத்து ஓவர்களில் பொன்டிங்கும் மார்ட்டினும ஆடிய சன்னதத்தில் குவிக்கப்பட்டவை 109 ஓட்டங்கள். 103 பந்துகளில்தன் சதம் எட்டினார் பொன்டிங். அவரது இரண்டாவது அரைச்சதத்தை 29 பந்துகளில் எட்டினார் என்றால், அடித்த வேகத்தைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். கடைசி ஓவரில் மட்டும் 18 ஓட்டங்கள் பெறப்பட்டன. கடைசி 10 ஓவர்களில் கண்ணுக்குக் குளிர்ச்சியாய் சிக்ஸர்கள் பல பறந்தன. 50 ஓவர்கள் முடிவில் 359 ஓட்டங்களைக் குவித்திருந்தது ஆஸ்திரேலியா. அதில் பொன்டிங் ஆட்டமிழக்காமல் பெற்ற 140 ஓட்டங்கள் அடக்கம். 121 பந்துகளில் நான்கே பௌண்டரிகளுடனும் 8 சிக்ஸர்களுடனும் அவர் அத்தனை ஓட்டங்களைக் குவித்தார். உலகக் கிண்ண இறுதி ஆட்டங்களில் இது வரைபெறப்பட்ட அதிக ஓட்டங்கள் என்ற சாதனையைக் கடந்தார். 1979 இல் விவியன் ரிச்சர்ட்ஸன் பெற்ற 138 ஓட்டங்களே இதுவரை இறுதியாட்டத்தில் பெற்ற ஆகக்கூடுதலான ஓட்டங்களாகும். இதுவரை நடந்த 8 உலகக் கிண்ணப் போட்டிகளின் இறுதியாட்டங்களிலும் குவிக்கப்பட்ட ஆகக் கூடுதலான மொத்த ஓட்டங்கள் என்ற சாதனையையும் ஆஸ்திரேலியா நிகழ்த்தியது.

மலையத்தனை இலக்கைப் பார்த்ததுமே மலைத்துப்போனது இந்தியா. அது எதிர்பார்க்கவில்லை இத்தனை மோசமாக தனது பந்துவீச்சாளர்கள் செயற்படுவார்கள் என்று. இலக்குப் பெரிது, வெற்றிக்கு இருக்கும் ஒரே வழி கரணம் தப்பினால் மரணம் என்பதாக அடித்தாடுவது ஒன்றுதான். களமிறங்கியது இந்தியா. கடும் அழுத்தத்தின் மத்தியில் அதன் துடுப்பாளர்கள். இறங்கியதுமே அடித்தாட முயன்றார் சச்சின். முதல் பௌண்டரி அவருக்கு கைவசமா யிற்று. ஆனால், அடுத்த பந்து காலை வாரிவிட்டது. மெக்ராத் வீசிய பந்தை அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் டெண்டுல்கர். இந்தியாவின் நம்பிக்கை ஊசலாட ஆரம்பித்தது. 4 ஓட்டங்களுக்கே முதல் விக்கெட் வீழ்ச்சி பேரதிர்ச்சிதான். களமிறங்கிய கங்குலி அணியை நிமிர்த்த முயன்றார். எல்லாப் பந்துகளையும் அடித்தாட முயன்றார். இடையிடையே வாய்த்தாலும் அவரது வித்தைகள் ஆஸி. பந்துவீச்சாளர்களிடம் செல்லுபடியாகவில்லை.

லீ வீசிய பந்தில் 'ஸ்குயார் லெக' திசையில் நின்ற மார்ட்டினிடம் பிடி கொடுத்தார் ஷேவாக். அதிர்ச்சியில் உறைந்துபோனார்கள் இந்திய ரசிகர்கள். நல்லவேளையாக லீ வீசியது முறைதவறிய பந்து என்று அறிவித்தார் நடுவர். அப்பாடா என்று பெருமூச்சு விட்டது இந்தியா. ஆனாலும் நீண்ட நேரம் அந்த நிம்மதி நிலைக்க




வில்லை. கங்குலி லீயின் பந்தை தூக்கி அடித்து லீமனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கைவ்வையும் உடனேயே விரட்டி அடித்தார் மெக்ராத். 11ஆவது ஓவரில் 59 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்தது இந்தியா. தட்டுத்தடுமாறி பரிதவிக்க ஆரம்பித்தது. வந்தவர் திராவிட் மறுபுறத்தில் சிறிது நம்பிக்கை தரும் விதத்தில் அபாரமாக ஆடிக் கொண்டிருந்தார் ஷேவாக். ஆஸிப் பந்துவீச்சாளர்களைச் சிறிது கலங்கடித்தவர் அவரே. பௌண்டரிகளும் சிக்ஸர்களும் அவரிடம் இருந்து சீறின. 50 பந்துகளில் தன் அரைச் சதத்தை எட்டினார் அவர். 20ஆவது ஓவரில் 122 ஓட்டங்களை பெற்றது இந்தியா.

72 ஓட்டங்களைப் பெற்றபோது அன்ரூ பிக்சலின் பந்தை ஷேவாக் 'கட்' செய்ய முயல, 'டீப் கவர்' திசையில் நின்ற ஹெக உயரே எம்பினார், பந்து அவரின் கையில் பட்டு கீழே வீழ்ந்து. மற்றொரு தத்துக் கழிந்தது ஷேவாக்குக்கு.

எனினும், 81 பந்துகளில் 82 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது அவசரப் பட்டு ஒரு ஓட்டம்பெற முயல லீமனால் 'ரன் அவுட்' செய்யப்பட்டார். 'மிட் ஓவ்' திசையில் இருந்து லீமன் எறிந்த பந்து ஷேவாக் எல்லையை எட்டும் முன் விக்கெட்டை நேரே பதம் பார்த்தது. 23.5 ஓவரில் 147 ஓட்டங்களுக்கு 4ஆவது விக்கெட்டை இழந்தது இந்தியா. அத்துடன் அதன் தோல்வி உறுதிப்படுத்தப்பட்டது. பின்னால் வந்தவர்கள் எவரும் உருப்படியாகச் செய்யவில்லை. யுவராஜ்சிங் கொடுத்த 3 சந்தர்ப்பங்களைத் தவறவிட்டார்கள் ஆஸ்திரேலியர்கள். 47 ஓட்டங்களைப் பெற்றபோது திராவிட் ஆட்டமிழந்தார். தொடர்ந்து யுவராஜ்சிங் (24), டினேஷ் மொங்கியா (12), ஹர் பஜன் சிங் (07), ஷஹீர்கான் (04), ஸ்ரீநாத் (01) என்று எல்லோரும் சுருண்டு போக 39.2 ஓவர்களில் எல்லாமும் முடிவுக்கு வந்தது.

மூன்றாவது தடவையாக கிண்ணத்தை வென்ற ஒரே அணி என்ற பெருமையை ஆஸ்திரேலியா தட்டிச் சென்றது. 140 ஓட்டங்களைத் குவித்து இந்தியாவின் கனவுகளைச் சிதறடித்த பொன்டிங் ஆட்டநாயகன். PTP

# .எங்கே போயிற்று...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யும் எல்லைக்கு வெளியே விரட்டி அடித்து தூள் கிளப்பிவிட்டார்கள் ஆஸ்திரேலியர்கள். இடதுகை ஆட்டக்காரர் தலைமையிலான அணிதான் இந்தக் கிண்ணத்தை வெல்லும் என்று கணித்துச் சொன்ன இந்திய சோதிடர் வாக்கு காற்றோடு கரைந்துபோனது.

தின் மிகக் கூடிய ஓட்ட எண்ணிக்கை, இறுதியாட்டத்தில் தமக்கு எதிராகத் தான் அடிக்கப்படும் என்று. ஆனால் அதுதான் நடந்தது. 359 ஓட்டங்கள் என்ற மிகப் பெரிய இலக்கு. அடித்துக் குவித்திருந்தார்கள் ஆஸ்திரேலியாவின் நால்வர் மட்டும். அளவுக்கதிகமாகவே 'சிக்ஸ்' அடிக்கப்பட்ட



வலது கை ஆட்டக்காரத் தலைவர் கைகளில் இப்போது கிண்ணம்.

ஆரம்பத்தில் இருந்து ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் கை ஓங்கியே இருந்தது. முதல் ஓவரிலேயே 15 ஓட்டங்கள். அவற்றில் 8 உதிரிகள். முதற்கோணல் முற்றும் கோணலாயிற்று இந்தியர்களுக்கு. ஓட்டச் சராசரியை 6 ஓட்டங்களில் இருந்து அநேகமாகக் குறைய விடவில்லை ஆஸ்திரேலியர்கள். இந்தியர்கள் முழுப்பலத்துடன் மோதிப் பார்த்தும் பெயர்க்க முடிந்தது இரண்டு வக் கெட்டுக்களை மட்டும்தான். அதற்குப் பின்னர் ஆட்டமே காணவில்லை எந்த விக்கெட்டும். அடித்து தூள் கிளப்பி விட்டார்கள்.

களமிறங்கும் போதும் இந்தியர்கள் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள் இந்த உலகக் கிண்ணத்

ஆட்டம் இது. மொத்தம் 16 'சிக்ஸ்'கள் விளாசப்பட்டன.

பதிலுக்குக் களமிறங்கும் போதே தளர்ந்திருந்தது இந்தியா. முதல் ஓவரிலேயே டெண்டுல்கர் இழந்ததும் இடிந்து போனது. கங்குலியிடம் அந்த விரக்தி தெரிந்தது. இளையவர்கள் கொஞ்சம் தன்னம்பிக்கை தந்தார்கள்.

ஷேவாக்கின் அற்புதமான 'ரன் அவுட்' இந்தியாவின் அத்தனை கனவையும் தகர்த்தது. நம்பிக்கைகள் தவிடுபொடியாகின. ஆட்டத்தின் திருப்பு முனை அங்கே டெரன் லீமன் உருவில் தோன்றிற்று. அவர் ஷேவாக்கின் விக்கெட்டைச் சரிக்க தோல்வி நிச்சயமாயிற்று. அந்தச் சரிவில் இருந்து இந்தியாவால் எழமுடியாமலே போனது. கிண்ணத்தைக் கோட்டைவிட்டது. 20 வருடங்களின் பின்னர் கிடைத்த சந்தர்ப்பம் தவற விடப்பட்டது. கபீல்தேவுக்குப் பின் னர் இந்தியாவில் முடிசூடிக் கொள்ள ஆளில்லாமல் போனது.

தோல்விக்கு காரணங்களும் சாக்குப் போக்குகளும் எப்போதும் போல இனியும் வரும். காரசாரமாய் விமர்சனங்கள் வரும். ஆனால், இந்திய ரசிகர்களின் துயரத்துக்கு எப்[illegible] ஈடுசொல்ல முடியாதில்லைய[illegible]

-கனிமொ[illegible]

## மோசமான...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இடங்களில் வீழ்த்தியிருந் தோமானால், அவர்களை (ஆஸ்திரேலியர் களை) வெளியேற்றி இருக்க முடியும். குறைந்தது 300 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியிருந்தாலாவது இலக்கை எட்டமுடிந்திருக்கும்" - என்றார் கங்குலி.

இளம் பந்துவீச்சாளரான ஷஹீர்கான் தன் முதல் ஓவரிலேயே 15 ஓட்டங்களைக் கொடுத்தமை இறுதியாட்டத்தில் படுமோசமான செயல் என்றார் கங்குலி.

"அவர் குறும் பந்துகளை வீசினார். ஏன் அவர் பந்துகளை எல்லா இடங்களிலும் வீழ்த்தினார் என்பது புரியவில்லை. 360 என்ற இலக்கு மிகப் பெரியது. நாம் விளையாடவேண்டும் என்பதற்காக மைதானத்துக்குள் போய வந்தோம். ஓவருக்கு 7 அல்லது ஏழரை ஓட்டங்களை அடிப்பது என்பது சர்வதேச கிரிக்கெட்டில் இலகுவான ஒன்று அல்ல" - இப்படி கங்குலி மேலும் சொன்னார்.

## தொடரின்...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இவ்விருதுக்கு மிகவும் தகுதியானவர்." - என்றார்.

ஆட்ட நாயகனாக தெரிவாகிய டெண்டுல்கருக்கு ஒன்றரைக் கிலோ எடையுடைய தங்கக் கிண்ணம் பரிசாக வழங்கப்பட்டது.

ஆட்டங்களின் சிறப்பாட்டக்காரர்களுக்கான தங்கக் கடிகார விருதுகளும் தொடரின் சிறப்பாட்டக்காரருக்கான தங்கக் கிண்ண விருதும் தென்னாபிரிக்கத் தங்கச் சுரங்கத் தொழில்துறையினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-5)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னையா மீனாட்சி

சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த பொன்னையா மீனாட்சி நேற்று (23.03.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னையா (முன்னாள் உரிமையாளர், விநாயகா ஸ்ரோர்ஸ, சங்கானை) அவர்களின் அன்பு மனைவியும் சத்தியபாமா, சாம்பசிவம் (கல்வித் திணைக்கள உத்தியோகத்தர், சங்கானை பொ[illegible] கல்லூரி அதிபர், இலங்கை சைவர்கழக அமைப்பாளர்), சந்திரா, இந்திரா, இரதி, சிறிதரன், சிவலிங்கம் (சுவிஸ்), சிவராசா, கெங்கா, சிறிகாந்தா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜயகுமார் (அமரர்), கனகராசா, கயிலைநாதன், மனோகரன் (முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், தெல்லிப்பழை), சிறிதரன், விஜயரஞ்சினி, கிருபாலினி, நாகேஸ்வரி (சுவிஸ்), வசந்தகுமாரி, இந்துமதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கருணாகரன் (ஆசிரியர், பொன்ஸ் கல்லூரி, சங்கானை), பிரதீபன் (கனடா), சிவதீபன், நவதீபன், குலதீபன், ஜெகதீபன், ரோகினி, கிரிசாந்தன், பிருந்தா, சுவேதன், சுகர்னன, கேசிகா, தனாதிபன், சேயன், சிறீசன்[illegible]சாந்தி, ரசிகா, வினோதன், பபிகா, ரேணுகா, பிரதீஸ், மிதுசா, மது[illegible], [illegible]ரணவி ஆகியோரின் அன்புப பேர்த்தியும் லக்ஷிகாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்கானையில் உள்ள "பொன்மீனா" இல்லத்தில் இன்று (24.03.2003) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சங்கானை விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*சங்கானை.*

(15916)

தகவல்:
சைவப்பிதா பொன் சாம்பசிவம்
(ஆசிரியர்-மகன்)

# புலிகளுடன் மட்டும்தான் பேசவேண்டும் என்றே கூறினோம்

# ஆனால் அவர்கள்தான் ஏகபிரதிநிதிகள் எனக் கூறவில்லை

## கூட்டணி யாழ்.அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் ஆனந்தசங்கரி உரை

யாழ்ப்பாணம்,மார்ச்24

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசு, விடுதலைப் புலிகளுடன் மட்டுந்தான் பேசவேணடும் என்று கூறினோமே தவிர, தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் புலிகள்தான் என்று நாங்கள் ஒருபோதுமே கூறியிருக்கவில்லை.

- இப்படிக் கூறியிருக்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந்தசங்கரி.

கட்சியின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்றுநடைபெற்ற 'கலந்துரையாடல் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினை விவகாரத்தில் புலிகளுடன் மட்டும்தான் பேச வேண்டும் என்பதில் எமக்கு இருவேறு கருத்துக கிடையாது. அவர்களின் செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஆனால், அவர்கள் இரு என்றால இருப்பதற்கும், எழும்பு என்றால் எழும்புவதற்கும் நாங்கள் தயாரில்லை. அப்படி ஒரு நிலை வந்தால் எமது கட்சியையும் கலைத்துவிட்டுத்தான் போகவேண்டும்.

தமிழ் மக்களுக்காக பாடுபட்ட தலைவர் அமரர் அமிர்தலிங்கத்துக்காக அழுவதற்குக் கூட எமக்கு சுதந்திரமில்லை. அவரது நினைவாக உருவாக்கப்பட்ட புத்தகத்தை வெளியிட முடியாமல் இருக்கின்றது. இது தான் யதார்த்தம்.

யாழ். பொதுநூலகத்திலே 99 சதவீதமான வேலைகள் முடிவடைந்து விட்ட பிறகும் கூட அதனைத் திறப்பதற்கு முடியவில்லை. நூலகத்தைக் கட்டி முடிப்பதற்கு அரும்பாடுபட்ட யாழ்.மேயர் செல்லன் கந்தையன் தனது பதவிக்காலத்தில் அதனைத் திறந்து வைப்பதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டது வருந்தத்தக்க விடயமாகும்.

ஈ.பி.டி.பியினரை நாடாளுமன்றத்தில் வைத்து நார்நாராக கிழித்தவன் நான்தான். ஆனால், அந்த ஈ.பி.டி.பியின யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள்கூட நூலகத்தைத் திறப்பதற்கு சம்மதித்திருந்தார்கள்.

அந்தளவுக்கு நான் நூலகத்தைத திறப்பதில் அவர்களுக்குக்கூட வெறுப்பு இருக்கவில்லை என்பதனை சுட்டிக் காட்டியே ஆக வேண்டும்.


முன்பெல்லாம் வெளிநாடுகளின் பிரதிநிதிகள் இங்கு வருகின்ற பொழுது தமிழ் மக்கள் தொடர்பாகத் தவறாமல் எம்முடன் கலந்துரையாடிச் செல்வதே வழமை. ஆனால், இப்பொழுதெல்லாம் இங்கு வருகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள் நேரடியாக கிளிநொச்சிக்குச் சென்று புலிகளின் பிரதிநிதிகளுடன்தான் பேசுகின்றார்கள்.

தேர்தலில் போட்டியிடுவதற்கு பலத்த அச்சுறுத்தல்கள் இருந்த காலத்தில் அனைவரும் ஒதுங்கிப் போக எதற்கும் அஞ்சாமல் துணிநது நின்று கூட்டணியின் மானங்காத்தவர் யாழ்.மாநகர முன்னாள் மேயர் கந்தையன்.

தனது உயிரைக்கூட துச்சமென மதித்து கூட்டணியைத் தலைநிமிர வைத்த கந்தையனுக்கு துரோகிப் பட்டம் சூட்டப்பட்டிருக்கிறது.

ரெலோ தொடக்கம் ஈ.பீ.ஆர்.எல்எவ. வரைக்கும் அரசிடம் பணம் வாங்கிக கொண்டுதான் இருக்கின்றன. அவர்களின் அந்த செயற்பாடுகளினால் கூட்டணிக்கும் அவப்பெயர்தான் ஏற்பட்டிருக்கின்றது - என்றார் சங்கரி. (உ-4)

## World Cup Score card - 2003

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல. 1, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி : இந்தியா
தொடர் நாயகன் : சச்சின் டென்டுல்கர்
ஆட்டநாயகன் :ரிக்கி பொன்டிங்
முடிவு : 125 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வெற்றி

### ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| ஏ.கில்கிறிஸ்ட் | c/ ஷேவாக் | b/ஹர்பஜன் | 57 | 48 | 8 | 1 |
| [illegible] | c/ திராவிட் | b/ஹர்பஜன் | 37 | 54 | 5 | 0 |
| ரி.பொன்டிங் | not out | | 140 | 121 | 4 | 8 |
| [illegible] | not out | | 88 | 84 | 7 | [illegible] |
| உதிரிகள் | | | 37 | | | |
| [illegible] | (50 ஓவர்கள்) | | 359/2 | | | |

களமிறங்காதவர்கள் : ஏ.சைமன்ஸ், ஏ.பிக்ஸல், பி.லீ, டி.லீமன், யீ.ஹோக், யீ.மெக்ராத், எம்.பெவன்

கான் : 07-00-67-00, ஸ்ரீநாத் :10-00-87-00, நேஹ்ரா :10-00-57-00,
ஹர்பஜயன்சிங் :08-00-49-02, யுவராஜ்சிங் : 02-00-12-0,
ஷேவாக் 03-00-14-00, டென்டுல்கர்: 03-00-20-00, டி.மொங்கியா07-00-39-00

### இந்தியா

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| எஸ்.டென்டுல்கர் | c & b/மெக்ராத் | | 04 | 05 | 1 | 0 |
| [illegible] | run out (லீமன்) | | 82 | 81 | 10 | 3 |
| எஸ்.கங்குலி | c/லீமன் | b/லீ | 24 | 25 | 3 | 1 |
| [illegible] | c/கில்கிறிஸ்ட் | b/மெக்ராத் | 00 | 03 | 0 | 0 |
| டி.திராவிட் | | b/பிக்ஸல் | 47 | 57 | 0 | 0 |
| [illegible] | c/லீ | b/ஹோக் | 24 | 34 | 1 | 0 |
| டி.மொங்கியா | c/மார்டின் | b/சைமன்ஸ் | 12 | 11 | 2 | 0 |
| [illegible] | c/மெக்ராத் | b/சைமன்ஸ் | 07 | 08 | 0 | 0 |
| ஷகீர்கான் | c/லீமன் | b/மெக்ராத் | 04 | 08 | 0 | 0 |
| [illegible] | | b/லீ | 01 | 04 | 0 | 0 |
| ஏ.நேஹ்ரா | not out | | 08 | 04 | 2 | 0 |
| [illegible] | | | 21 | | | |
| மொத்தம் | (39.2 ஓவர்கள்) | | 234/10 | | | |

மெக்ராத் : 8.2-00-52-03, லீ : 07-01-31-02,
ஹோக் : 10-00-61-01, லீமன் : 02-00-18-00,
பிக்ஸல் : 10-00-57-01, சைமன்ஸ் : 02-00-07-02

## யாழ்.நூலகத்துக்கு இந்திய அன்பளிப்பு

யாழ்.பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி புத்தகங்களை இந்தியா அன்பளிப்பாக வழங்கவிருக்கின்றது.

இதுதொடர்பான சம்பிரதாயபூர்வ வைபவம் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு ·கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் உள்ள இந்தியக் கலாசார மையத்தில் நடைபெறும்.

இந்தியத் தூதுவர் நிருபம் சென், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரியிடம் நூல்களை வைபவரீதியாகக் கையளிப்பார்.

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவே முதல் முறை ஆகும். முன்னேறி வருகின்ற அமெரிக்கத் துருப்பினருக்கு இது ஒரு பின்னடைவான செய்தி என்று அவதானிகள் கூறுகின்றனர்.

தெற்கு ஈராக்கில் தனது படையினர் சிலர் காணாமற் போயிருப்பதை அமெரிக்கா ஊர்ஜிதம் செய்துள்ளது.

சுமார் 10 பேர் வரை காணாமற் போயிருக்கின்றனர் என்று கூட்டணிப் படைகளின் தளகர்த்தர் ஜெனரல் றிச்சார்ட் மேயர் தெரிவித்தார்.

அமெரிக்கப் படைகள் கைப்பற்றியதாகக் கூறப்படும் ஈராக்கின் தென்பகுதி நகரங்களில் இன்னமும் தீவிர சண்டை நடைபெற்று வருகின்றது. ஈராக்கின் குடியரசு காவற் படையினர், அமெரிக்கப்படையினரை எதிர்த்து தீவிர சண்டையில் ஈடுபட்டு வருகின்றனர். இருதரப்பிலும் பலத்த உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டு வருவதாக சுயாதீன செய்தி வட்டாரங்கள் கூறுகின்றன. (ஐ)

*(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)*

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசதிகளே இன்னும் செய்யப்படவிருக்கின்றன.இந்தநிலையில் குறித்த தினத்தில் அதனைத் திறப்பதற்கு தடை விதிக்கப்பட்டமை மிகவும் தவறான செயலாகும்.

இது குறித்து புலிகளின் தலைமைப் பீடத்துக்கு நான் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

விடுதலைப் புலிகளின் வரி அறவீடுகள் தொடர்பாக பலர் என்னிடம் கூறியிருந்தார்கள். இதுதொடர்பாக நான் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனிடம் விவரமாக எடுத்துக் கூறியிருக்கின்றேன்.

நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்பட்டதன் பின்னரே விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்புகள் மற்றும் உதவிகள் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆனால், அதுவரை காலமும் தமது உறுப்பினர்களை பராமரிப்பதற்காக வரி அறவிடப்பட வேண்டியது அவசியமாக இருக்கின்றது என்று புலிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர் - என்றார் ரவிராஜ். (உ-4)

# பாடசாலைகளுக்கு நூல்கள் வழங்கும் வைபவம் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்ப்பாண்ம் றோட்டறிக் கழகத்தின் விருதுகள் வழங்கும் விழாவும் பாடசாலைகளுக்கு நூல்கள் வழங்கும் நன்கொடை வைபவமும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிகசு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் கலந்து கொளளவுள்ளார்.

லண்டனிலுள்ள 'லிடெர்' நிறுவனததினால் பாடசாலைகளுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட நூல்கள் இவ்விழாவில் வைத்து கையளிக்கப்படவுள்ளன. அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் பிரதிநிதிகளை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. அத்துடன் இன்ரறக்ற் கழகம் இயங்கும் பாடசாலைகளின் சகல இன்ரறக்ற் கழக அங்கத்தவர்களையும் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் விருதுகளைப் பெறுகின்ற இன்றறக்ட், றோட்டறக் கழகங்க உறுப்பினர்களின் விவரம் வருமாறு:-

★ சிறந்த தலைவர்:- ஜசிந்தா இராமச்சந்திரன் (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.ஆனந்தகுமார் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), எஸ்.உமாகாந்த் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

★ சிறந்த செயலாளர்:- கே.சத்தியசீலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), வி.சதீஸ் (யாழ்.மத்திய கல்லூரி), ஜே.சுமித்திரா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஐ.ஆர்.பிராங்ஜெனதன் (சென்.பற்றிக்ஸ்).

★ சிறந்த பத்திராதிபர்:- எஸ்றூபன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

★ சிறந்த இயக்குநர்:- எஸ்.கஜராஜா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), வேணி குணராஜசிங்கம் (வேம்படி மகளிர் கல்லூரி).

★ சிறந்த பொருளாளர்:- வி.கௌரிகா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), தனுஜா தனபாலசிங்கம் (வேம்படி மகளிர்).

★ விசேட தெரிவு:- என்.சயந்தன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

★ சிறந்த றோட்டறக்ட் கழகத்தினர்:- எஸ்.சிவரூபி (சுன்னாகம்), ஜே.திவாகர் (யாழ்.நகர் மையம்), ரி.ரமணன் (நல்லூர்).

★ சிறந்த றோட்டறக்ட் கழகம்:- நல்லூர்.

★ சிறந்த இன்றறக்ட் கழகம்:- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

★ சான்றிதழ் பெறுவோர் - திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை:- நிரோசினி அலோசியஸ், காயத்திரி திருச்செல்வம், ஆன்சிந்துஜா புவனேந்திரன், கொண்சி ஜோசப், சிந்துஜா ஆனந்தராஜா.

கொக்குவில் இந்துக்கல்லூரி:- பி.அருட்செல்வன், வி.கஜேந்திரன், வி.சேந்தன், வி.பகிரதன், எஸ்.வினோஸ்,

வேம்படி மகளிர் கல்லூரி:- கே.மதுரா, ரி.காயத்திரி, எஸ்.ஸ்ரீமகள், ஜே.தமிழினி.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி:- பி.பிரதீபன்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி:- எஸ்.தர்ப்பனா, எஸ்.சுமிதா.

யாழ்.மத்திய கல்லூரி:- ப.நாகரூபன். (ஐ-4)

## ஐந்து சந்திப் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொத்து இழப்புகளுக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை தாமே நேரடியாக வழங்குவதாக அமைச்சர் மகேஸ்வரன் சம்பந்தப்பட்டோரிடம் தெரிவித்தார்.

மோதல் நடந்த பகுதியில் நேற்றி ரவும் பொலீஸார் காவல் பணியில் ஈடுபட்டனர். (ஐ-12)


புதிய கொம்ப்யூட்டர் பாடநெறிகள்

Diploma in Computer Software Engineering

Professional Diploma in Graphic Design

Diploma in Web Multimedia

Diploma in Visual Programming



அனைத்து பாடநெறிகளுக்கும் இலவச பாடநூல்கள்

ASIAN COMPUTERS
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021-222 5677

NEW SCIENCE CENTRE JAFFNA

புவங்கள்
WED., FRI., 6.00 - 7.00 (p.m.)
ஆரம்பம்: 26.03.2003

வெப்பவியல்
TUE., THU., 4.00 - 5.00 (p.m.)
ஆரம்பம்: 27.03.2003

By: M.கருணாநிதி

LIONAIR
LANKA'S PRIDE IN THE SKY
யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்
பாதுகாப்பான ~ சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :
லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்.
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992
(C/26688)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.03.2003இல் அச்சிட்டு வெளியீடப்பெற்றது.